பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 02 புதன்கிழமை (19.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 327

### ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு — சுயநிர்ணய உரிமை இல்லை

### தாயகக் கோட்பாடும் நிராகரிப்பு — பொதுக்கட்டமைப்பும் 'அவுட்'

# பெரும்பான்மை இனத்தின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்தி மஹிந்தவின் விஞ்ஞாபனம்

## நேற்று வெளியிடப்பட்டது

கொழும்பு, ஒக்ரோபர்19

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் பெரும் இழுபறியின் பின்னர் ஒருவாறு நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

எதிர்பார்க்கப்பட்டபடி நாட்டில் பெரும்பான்மை இனத்தவர்களின் மேலாதிக்கத்தை உறுதிப்படுத்துவதாக அது அமைந்திருந்தது.

இனப்பிரச்சினைக்கான எந்தத் தீர்வும் ஒற்றையாட்சிக்குள்தான் என்று தெரிவிக்கும் அந்த விஞ்ஞாபனம், எந்தத் தரப்புக்கும் இலங்கைக்குள் தனியான தாயகமோ, சுயநிர்ணய உரிமையோ எதுவும் கிடையாது என்றும் திட்டவட்டமாகக் கூறுகின்றது. ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகாவும், விடுதலைப் புலிகளும் இணக்கம் கண்ட பொதுக் கட்டமைப்பையும் இந்த விஞ்ஞாபனம் அடியோடு நிராகரித்துவிட்டது.

'மஹிந்தவின் சிந்தனைகள்' என்ற மகுடத்தில் 'புதிய இலங்கை' என்ற தலைப்பில் இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் அமைந்திருக்கின்றது.

இதனை வெளியிடும் வைபவம் நேற்று முற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள சகல கட்சிகளினதும் தலைவர்களும் இந்த நிகழ்வில் பங்குகொண்டனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் பிரதமர் பதவிக்காக அடுத்துப்

(02ஆம் பக்கம் பார்க்க)



### 'மஹிந்தவின் சிந்தனை' தமிழ்மொழியில் இல்லை!

கொழும்பு,ஒக்.19

'மஹிந்தவின் சிந்தனை' என்ற பிரதமர் மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டாலும் அது சிங்கள மொழியில் மாத்திரமே வெளியாகியுள்ளது. ஆங்கில, தமிழ்ப் பிரதிகள் நேற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளோடு இணக்கம் காணமுன் தீர்வு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப் பிரதமர் திட்டம்

### சமாதான முயற்சிகள் குறித்து அவரது விஞ்ஞாபனம் தரும் தகவல்கள்

கொழும்பு,ஒக்.19

தான் ஜனாதிபதியானால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாகப் புலிகளுடன் இணக்கம் காண்பதற்கு முன்னர் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்குப் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பிரதமரினால் நேற்று வெளியிடப்பட்ட அரசின் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்களத்தில் வெளியான இந்த விஞ்ஞாபனத்தில் பல தரப்பினருடனும் கலந்துரையாடியது குறித்தும் பேசுவது குறித்தும் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாம் எடுக்கவிருக்கும் தீர்வுக்கான முயற்சிகள் குறித்து இந்த விஞ்ஞாபனத்தின் (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கையும் கிழக்கையும் பிரிக்கப் பிரதமர் திட்டமா?

### விஞ்ஞாபன வாசகங்கள் எழுப்பும் சந்தேகம்

கொழும்பு,ஒக்.19

வடக்கும் கிழக்கும் ஒரே நிர்வாக மாகாணங்களாக்கப்பட்டு 'வடக்கு - கிழக்கு மாகாணம்' என்று அழைக்கப்பட்டு வந்தாலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வெளியிட்ட ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம் வடக்கையும், கிழக்கையும் தனித்தனி மாகாணங்களாகக் கருதுவதாக அமைந்துள்ளது. 'வடக்கு மாகாணம்', 'கிழக்கு மாகாணம்' என்று அர்த்தப்பட அந்த விஞ்ஞாபனத்தின் வாசகங்கள் அமைந்திருந்தன.

ஏற்கனவே, பௌத்த சிங்கள மேலாண்மை (16ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸார் மீது கல்லாறில் தாக்குதல்: கான்ஸ்டபிள் பலி; மற்றொருவர் காயம்

கொழும்பு, ஒக். 19

மட்டக்களப்பு கல்லாறில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தாக்குதலில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொரு கான்ஸ்டபிள் படுகாயமுற்றார் எனக் களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பொலீஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச்சென்றுவிட்டனர். கல்லாறு சோதனைச்சாவடியில் கடைமையாற்றும் இந்தப் பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவரும் களுதாவளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது இந்தத்தாக்குதல் (16ஆம் பக்கம் பார்க்க)

## நேற்று மாலை நாடு திரும்பியதுமே ஜனாதிபதி அவசர மந்திராலோசனை

கொழும்பு,ஒக். 19

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை லண்டனில் இருந்து நாடு திரும்பினார். வந்ததும் வராததுமாக அவர் மூத்த அமைச்சர்களையும் சுதந்திரக் கட்சியின் மூத்த பிரமுகர்களையும் அழைத்து மந்திராலோசனை நடத்தினார்.

தனிப்பட்ட விஜயமாக லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி நேற்று மாலை 4.30 மணிக்கு 'கட்டார் ஏயார் வைஸ்' (16ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மட்டக்களப்பில் ஒருவர் படுகாயம்

மட்டக்களப்பு - வைத்தியசாலை வீதியில் உள்ள பிரதான நீர்த்தாங்கிக்கு அருகில் வைத்து குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 6.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என மட்டக்களப்புப் பொலீஸார் தெரிவித்தனர்.

புதூர், திமிலை தீவைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி வேலுப்பிள்ளை (வயது-49) என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் விவசாய பீடத்தின் கட்டட வேலையை நிறுத்த உத்தரவு!

கிளிநொச்சியில் யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயப்பீடத்திற்கான கட்டடவேலைகள உடனடியாக நிறுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு யாழ். பல்கலைக்கழகத்துணைவேந்தருக்கு நேற்று அறிவித்துள்ளது. கிளிநொச்சியில் விவசாய பீடம் அமைப்பதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகத்துக்கு வழங்கியிருந்தது. இந்த அனுமதியின் பேரில் அண்மையில் அங்கு விவசாயபீடக் கட்டடத்துக்கான அடிக்கல் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தரால் நடப்பட்டு கட்டட வேலைகள் நடைபெற்று வந்தன. இப்போது அதனை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதற்கான காரணம் எது என்பது தெரியவரவில்லை. (ஐ )

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நேற்றுக்காலை சர்வதேச மாணவர் பேரவையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தில் எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் நிமலராஜனின் திருவுருவப் படத்திற்கு அவரது சகோதரி திருமதி கதிரவேலு ஈகைச்சுடர் ஏற்றுவதையும் - அவரது சிறிய தந்தையார் லோகநாதன் மலர்மாலை அணிவிப்பதையும் - நிகழ்வில் கலந்துகொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: அபிமானன்)

# நிமலராஜன் நினைவு நிகழ்வு சிறப்புற நேற்று நடந்தது

யாழ்ப்பாணம்,ஒக்.19

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் திருநெல்வேலியில் உள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் வே.தவச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முதலில் நிமலராஜனின் திருவுருவப்படத்திற்கு ஈகைச் சுடரினை அவரது சகோதரி திருமதி கதிரவேலு ஏற்றினார்.

மலர் மாலையை நிமலராஜனின் சிறிய தந்தையார் லோகநாதன் அணிவித்தார். அக வணக்கத்தைத் தொடர்ந்து மலர் அஞ்சலி நடைபெற்றது.

நினைவுரைகளை யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் என்.விஜயரூபன், உயர் தொழில் நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.சுகந்தன், தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் வி.குணேந்திரன், வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கச் செயலாளர் ஆர்.தயாபரன், ஆசிரியர் என். விஜயசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பத்திரிகையாளர்கள், நிமலராஜனின் உறவினர்கள், மாணவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர். (3-13)

# நிமால் நினைவு தினம் இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.19

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 5ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு ஊடக வளங்கள் பயிற்சி ம்மயத்தில் இடம்பெறவுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் மற்றும் நிமலராஜன் ஞாபகார்த்த அமைப்பு என்பன இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

சங்கத்தின் தலைவர் சி.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பலர் நினைவுரைகளை நிகழ்த்துவர். (3)

# சுகாதார ஊழியர் இன்று போராட்டம்

யாழ். மாவட்ட சுகாதார ஊழியர்கள் சுகவீன லீவுப் போராட்டம் ஒன்றை, இன்று நடத்தவுள்ளனர். சுகாதார ஊழியர்களால் நாடுமுழுவதும் இன்று நடத்தப்படும் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தே இவர்கள் இப்போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 1250/= சம்பளத்தை நிறுத்தியது மற்றும் வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் 2006 ஜனவரி முதல் நடைமுறைக்கு வரவேண்டிய 50 சதவீத சம்பள உயர்வை மறுத்தமை ஆகிய விடயங்கள் தொடர்பாகவே இப்போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - கொழும்பு தேசிய வைத்திய சாலை முன்பாக இன்று நண்பகல் 12 மணியளவில் சுகாதார ஊழியர்களால் ஆர்ப்பாட்டப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. (3-12-13-ரி)

# பெரும்பான்மை இனத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரிக்கப்பட்டிருப்பவருமான அநுரா பண்டாரநாயக்கா மற்றும் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நெருக்கமான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவேயில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் முதலில் பிரதமர் சிற்றுரை ஒன்றை ஆற்றினார். அதன் பின்னர் மதத் தலைவர்களிடம் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை அவர் கையளித்தார்.

அதைத் தொடர்ந்து ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கவிடமும், அதன் பின்னர் ஏனைய கட்சிகளின் தலைவர்களிடமும் முக்கிய பிரமுகர்களிடமும் அதன் பிரதிகளை அவர் கையளித்தார்.

அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக 'பிரிவினையற்ற நாடு- பெரும்பான்மையினரின் பிரகடனம் - கௌரவமான சமாதானம்' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள விடயங்களும் ஏனைய முக்கிய அம்சங்களும் வருமாறு:-

வடக்கு - கிழக்கில் நிலவும் பிரச்சினை குறித்து ஆழமாகச் சிந்திப்பதற்கும், புதிய தீர்வுக்கான வழிகளைத் தேடுவதற்கும் நான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன். கடந்த காலங்களில் நடைபெற்ற பேச்சுகளால் இரு மாகாணங்களின் இந்தப்பிரச்சினை முழு நாட்டிற்கும் பரவியது. பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியாகவும் இது பரவியது. இதனால் ஏற்பட்ட வெளியார் தலையீட்டினால் பிரச்சினை மேலும் சிக்கலடைந்தது.

குறிப்பாக, கடந்த ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியின்போது தொலைநோக்கின்றி, இலக்கின்றி ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் பல பிரச்சினைகள் ஏற்பட்டன. வடக்கில் எஞ்சியிருந்த ஜனநாயக நிறுவனங்கள் மேலும் அழிந்துபோயின. கிழக்கில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அவமானத்திற்கும் அநீதிக்கும் உள்ளாகினர். பாதுகாப்புப் படைகள் பலவீனப்படுத்தப்பட்டன. நாட்டு மக்களின் அபிப்பிராயம் அறியப்படாமல் வெளிநாடுகளில் பல்வேறு உடன்பாடுகள் எட்டப்பட்டன. அந்த உடன்பாடுகள் மக்கள் மீது சுமத்தப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டதுடன், தமிழீழ விடுதலைப் புலிகள் அந்த உடன்பாடுகளிலிருந்து விலகினர்.

சாத்தியமற்றுப்போன பழைய இடத்திலிருந்து - சாத்தியமற்றுப்போன பழைய வழியின்மூலம் - முன்னோக்கிச் செல்வதற்குப் பலர் முயற்சி செய்கின்றனர். இதனால், நிரந்தர சமாதானம் ஏற்படாது. மாறாக, தற்போது ஆயுதங்களைக் கையிலெடுக்காமல் ஜனநாயக வழியிலிருப்பவர்களும் கூட ஆயுதங்களை ஏந்தும் நிலைக்குத் தள்ளப்படுவர். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் நன்மை, தீமைகளை அறிந்து, சிறந்த வழியொன்றைத் தேர்ந்தெடுக்கலாமென நான் கருதுகிறேன். இதன்போது 'பிரிவினையற்ற நாடு, பெரும்பான்மையினரின் பிரகடனம், கௌரவமான சமாதானம்' என்ற கொள்கையினை நான் கடைப்பிடிக்கவுள்ளேன்.

நான் அதிகாரத்திற்கு வந்தவுடன் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து ஜனநாயகக் கட்சிகளுடனும் மேற்சொன்ன கொள்கைகளை அடிப்படையாக வைத்துப் பேச்சுகளை ஆரம்பிப்பேன். நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத அரசியற் கட்சிகளுடனும் அவ்வாறான பேச்சுகளை நடத்துவேன். பௌத்த மதத் தலைவர்கள், இதர ஆகமங்களின் மதகுருமார், சிவில் அமைப்புகள் - குறிப்பாக வடக்கு - கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களில் உள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் அமைப்புகள்- ஆகிய தரப்புகளுடன் பேச்சு நடத்துவேன்.

மூன்றுமாத காலத்தில் அந்தப் பேச்சுகளை நான் நிறைவுசெய்வேன். இணக்கம் காணப்பட்டவிடயங்கள், இணக்கம் காணப்படாத விடயங்களென வெவ்வேறாக இனங்கண்டு, இணக்கம் காணப்படாத விடயங்களுக்காகத் தேசிய தீர்மானமொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். அந்தத் தேசிய தீர்மானத்தில், நாட்டின் இறையாண்மை ஆட்புல ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி அமைப்பு, மக்களின் தேசிய அடையாளம், மக்களின் அமைதியான சகவாழ்வு என்பன பாதுகாக்கப்படும் வகையில் என்ற விடயங்களை உள்ளடக்குவதற்கு நான் எதிர்பார்த்துள்ளேன்.

பாரம்பரியத் தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படைவாதத்தில் சிக்கியிராமல் அனைத்துப் பிரஜைகளிடத்துமுள்ள அதிகாரத்தைக் கூடியளவுக்குப் பலப்படுத்தும் அமைதியான அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்திக்கொள்வது எனது முக்கியமான இலக்காகும். மக்களிடம் அதிகாரத்தை வழங்க நான் எதிர்பார்க்கிறேன். மக்களிடமே அதிகாரத்தை வழங்கவேண்டும். பலமான அதிகாரம் மிக்க பிரஜைகளை உருவாக்குவதன் மூலம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடலாமென்று நான் நம்புகிறேன். இதன்போது மேற்கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கமைய மக்கள் ஆணையின் அடிப்படையாகக் கருதப்படும் பெரும்பான்மைக் கொள்கையுடன் நான் உடன்படுகிறேன். எனது தனியான கருத்துக்குப் பதிலாக, பெரும்பான்மையான மக்களின் கருத்தை நான் ஏற்கிறேன். தேசியக் கொள்கையை எட்டியவுடன் உடனடியாக அந்த உடன்பாட்டை நான் சர்வஜன வாக்கெடுப்பிற்காக முன்வைப்பேன்.

மேற்குறிப்பிட்ட நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியில், தற்போது ஜனநாயகத்திற்கு வராமலிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுகளை ஆரம்பிப்பேன். இதற்காக அதன் தலைவரைச் சந்திக்கவும் நான் எண்ணம் கொண்டுள்ளேன். அனைத்து ஜனநாயக அமைப்புக்களுடன் சேர்ந்து ஏற்படுத்திய தேசிய கொள்கை உடன்பாட்டை நான் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் முன்வைப்பேன். இந்த நடவடிக்கையின் போது முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவேன்.

திட்டமின்றி, எதிர்காலமின்றி, காலவரையறை இன்றி நடத்திய பேச்சுகள் கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசில் கௌரவமான சமாதானத்தை எட்டத்தவறியிருப்பதால் நான் வேறு வழியொன்றைக் கடைப்பிடிக்க தீர்மானித்துள்ளேன். விடுதலைப் புலிகளுக்கு குறிப்பிட்ட காலவரையறை, குறிப்பிட்ட கால அட்டவணை ஒன்றை நான் வழங்குவேன்.

அதன்போது பிரிவினைவாதத்தை கைவிடுதல், ஆயுதக்களைவு, ஜனநாயகத்திற்கு பிரவேசித்தல், இறுதித்தீர்வு, அவற்றை நடைமுறைப்படுத்தல் போன்றவை தொடர்பில் பகிரங்கச்செயற்பாடொன்றிற்காக அவர்களின் இணக்கப்பாட்டைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

1977ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தொலைநோக்கற்ற வெளிநாட்டுக் கொள்கையின் காரணத்தினால் தான் எமது பிரச்சினைகளில் வெளிநாடுகள் தேவையற்ற வகையில் தலையிடும் நிலைமை ஏற்பட்டதாக நான் கருதுகிறேன். சமமற்ற இந்த வெளிநாட்டுத் தலையீடுகளை சமமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். எமது அயல்நாடான இந்தியாவுடன் முன்னுரிமை அடிப்படையில் நான் இதுபற்றிப் பேச்சுகளை ஆரம்பிப்பேன். பிராந்திய பாதுகாப்பு மற்றும் சமாதானம் தொடர்பில் அவர்களுடனும் உடன்பாடொன்றிற்கு வருவேன். எமது நாட்டிற்குப் பெரிதும் உதவியுள்ள சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனும் ஆசிய நாடுகளுடனும் ஒத்துழைப்பையும் கட்டியெழுப்புவேன்.

அமைதி முயற்சிகளுக்கு இணைத்தலைமைவகிக்கும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகளுடன் இந்தப் புதிய பிரவேசம் பற்றி நான் பகிரங்கப்பேச்சுக்குச் செல்வேன்.

இந்த அனைத்துப் பேச்சுகளும், இணக்கப்பாடுகளும் வெற்றியடைந்தால் நான் புதிய அரசமைப்பொன்றைத் தயாரிப்பதற்காக அரசமைப்பு நிர்ணய சபையொன்றை நியமிப்பேன். அதற்கு எதிர்க்கட்சியின் பிரதிநிதித்துவத்தையும் பெறுவேன். அப்போது புதிய அரசமைப்பு நகலைச் சர்வசன வாக்கெடுப்பிற்கு விடுவேன். பெரும்பான்மையானவர்களின் விருப்புடன் அது அங்கீகரிக்கப்பட்டால் உடனடியாக அதனை நடைமுறைப்படுத்துவேன். அமைதிப்பேச்சுகள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கும்போது, வடக்கு - கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலும் எனது பொதுவான அபிவிருத்தித் திட்டத்திற்கு மேலாக அதிவிசேட செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்துவேன்.

எந்தவொரு தீவிரவாத செயற்பாட்டுக்கும் இடமளிக்காத வகையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். போர்நிறுத்தக் கண்காணிப்பு குறித்து மீளாய்வு செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இதன்போது, பிராந்திய ஒத்துழைப்பைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மோதல்களால் இடம்பெயர்ந்தவர்கள் எந்தப் பாகுபாடுகளுமின்றித் தமது கிராமங்களில் மீளக்குடியேறுவதற்காக 'ஜாதிக சவிய' என்ற பெயரில் தனியான அதிகார சபையொன்றை நிறுவுவேன். மீளக்குடியேறும் ஒரு குடும்பத்திற்காக ஆரம்பத்தில் ஒன்றரை லட்சம் ரூபாவும், நிரந்தரக் குடியிருப்பிற்காக இரண்டரை லட்சம் ரூபாவும் பெற்றுக் கொடுக்கவுள்ளேன். இதற்காகத் தொண்டர் நிறுவனங்களையும், வெளிநாட்டு நன்கொடைகளையும் பயன்படுத்துவேன்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கு விரிவான, துரித செயற்றிட்டமொன்றை நடைமுறைப்படுத்த நான் எண்ணம் கொண்டுள்ளேன். இதன்போது, வடக்கு - கிழக்கு ஆகிய இருமாகாணங்களையும் மீளக்கட்டியெழுப்ப முன்னுரிமை கொடுக்கப்படும். இதற்காகப் பிரேரிக்கப்பட்டுள்ள ஆழிப்பேரலை அனர்த்த பாதிப்புகளைச் சீர்செய்வதற்கான பொதுக்கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படமாட்டாது. அதேசமயம், வடக்கு - கிழக்கைக் கட்டியெழுப்புவதற்கு அந்தப் பிரதேச மக்கள் பிரதிநிதிமார், மக்கள் அமைப்பு ஆகிய தரப்புகளின் நேரடிக் கருத்துகள் மற்றும் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்காக 'ஜயலங்கா' என்ற திட்டம் மூவின மக்களுக்காகச் செயற்படுத்தப்படும்.

-என்று அந்த விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய விடயங்கள் தொடர்பாக அந்த விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

### பொருளாதாரம்

உள்நாட்டு உற்பத்தியாளரை ஊக்குவிக்கும் அதேசமயம் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்களிப்பையும் பெறும் நவீனமயமான, சமத்தன்மை கொண்ட தேசிய பொருளாதாரத்திட்டம் - இதன் மூலம் வருடாந்தம் 8வீத பொருளாதார வளர்ச்சி. அந்த வளர்ச்சியின் நன்மைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

தேசிய வளங்கள், வருமான வழிகளுக்கு முக்கியமாக நிதி, பொருளாதார, போக்குவரத்துத் துறைகளின் அரச உரிமத்தை அப்படியே வைத்திருத்தல். அவை எவையும் தனியார் மயப்படுத்தப்படமாட்டா. விவசாயிகளுக்காகத் தனியாக விவசாய வங்கி.

### வர்த்தக, வாணிபம்

மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்களின் நிதி மற்றும் இதர பிரச்சினைகளுக்குத் தீர்வு. நடைபாதை வர்த்தகர்கள் முதல் உயர் மொத்த விற்பனை வர்த்தகவர்கள் வரை அனைவருக்கும் கடன் வசதிகள். கூட்டுறவு முறையை மீண்டும் பலப்படுத்தல்.

### மக்களுக்கான நிவாரணம்

கர்ப்பிணித் தாய்மாருக்கு தேவையான உணவுப் பொருள்கள் பொதி இலவச விநியோகம். சிறுவர் நலன்பேண புதிய அமைச்சு. ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்களுக்கான பால்மா கொள்வனவிற்கு மாதாந்தம் 200 ரூபா. முன்பள்ளி ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சி, நிதி வசதிகள். 2006ஆம் ஆண்டில் மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்குத் தொழில். அரச சேவையிலுள்ள 33 ஆயிரம் வெற்றிடங்களை உடன் நிரப்புதல். ஒப்பந்த மற்றும் சமயாசமய அடிப்படையிலான அனைத்து

(15ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# புலிகளின் இராணுவப் பலமே இன்று தமிழரின் அரசியல் பலம்

“விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தினால் உருவான யுத்தநிறுத்தம் தமிழ்பேசும் மக்களை அரசியல் பலம் பெற்றவர்களாக மாற்றும் நிலையை நாட்டில் இன்னும் ஏற்படுத்தவில்லை. விடுதலைப் புலிகளின் இராணுவப் பலம் தமிழ்மக்களின் அரசியல் பலமாக மாறுவதை விரும்பாத சக்திகள் சதி முயற்சி வேலைகளில் ஈடுபட்டுள்ளன.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரான இரா.சம்பந்தன், தமிழ்த் தேசிய எழுச்சிநாள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் தெரிவித்தார்.

புலிகளின் இராணுவப் பலம், தமிழ்பேசும் மக்களை அரசியல் பலம் பெற்றவர்களாக மாற்றவேண்டும். அவ்வாறு மாற்றப்படுவதை உடைப்பதற்குத் தான் அரசும் அதன் ஆயுதப் படையினரும் துணைப் படையினரின் துணையுடன் பல சூழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர் என்றும் சம்பந்தன் கூறியிருக்கின்றார்.

உண்மை நிலை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கூறுவதைவிட சற்று வேறுபட்டது. இப்போதைய நிலையில், புலிகளின் இராணுவப் பலம்தான் தமிழ் மக்களின் ஒரே அரசியல் வலிமை. அந்தப் பலத்தில்தான் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

புலிகளின் இராணுவப் பலத்தைப் பலவீனமடையச் செய்வதன் மூலம், தமிழர்களின் அரசியல் வலிமையை அழிப்பதற்குச் சதி முயற்சிகள் நடக்கின்றன என்று கூறுவதே பொருத்தமானது.

இலங்கைத் தீவு பிரிட்டிஷ் ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம்பெற்ற பின்னர், பேரினவாத ஒடுக்குமுறைக்கும், அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்ட தமிழர்கள், தங்களின் உரிமைக்கான போராட்டங்களை சாத்வீக வழியில் ஆரம்பித்த போது, அவர்களின் அரசியல் பலமாகத் தமிழ் மிதவாதக் கட்சிகள் இருந்தன. அரசியல் போராட்டங்களுக்கான உபாயமாக நாடாளுமன்றமும், தேர்தல்களும் அமைந்தன.

உரிமைகள் கோரி, அவர்கள் நடத்திய அஹிம்சை வழிப் போராட்டங்கள் - குறிப்பாக குந்துமறியல், சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம், சட்டமறுப்பு நடவடிக்கை, பகிஷ்கரிப்பு போன்றவை - சிங்களப் பெரும்பான்மையினரின் மேலாண்மைப் போக்கு அரசுகளினால் ஆயுதமுனையில், பலவந்தமாக அடக்கப்பட்டன.

அதாவது, தமிழர்களிடம் நலிவு நிலையில் இருந்த அரசியல் பலம், ஆட்சியாளர்களின் ஆயுதப் பலத்தால் முற்றாக அடக்கப்பட்டதையே ஐம்பதுகள் முதல் எழுபதுகள் வரை தமிழர்களுக்கு எதிரான அரசியல் ஒடுக்குமுறைச் சரித்திரமாக இலங்கைத் தீவு தரிசித்தது.

முள்ளை முள்ளால் எடுக்கும் உத்திப்படி, ஆட்சியாளர்களினால் ஆயுதமுனையில் அடக்கப்பட்ட அரசியல் பலத்தை இப்போது அதே ஆயுத பலத்தினால் மீட்டிருக்கிறார்கள் புலிகள். அந்த அரசியல் பலத்தை நிலையானதாக ஸ்திரப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளையே சம்பந்தன் எம்.பி. சுட்டிக்காட்டுவது போல பலவீனப்படுத்தி, முறியடிக்கும் முயற்சிகள் இப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

இனச்சிக்கலுக்கு - அதாவது, தமிழரின் உரிமைப் பிரச்சினைக்கு - அமைதி வழியில்பேசி, சமாதான முறையில் கலந்துரையாடி, இணக்கத் தீர்வு காண்போம், அவர்களுக்குரியதை அதிகாரப் பகிர்வின் மூலம் செய்வோம், தமிழர்களின் எழுச்சியை - கிளர்ச்சியை - ஆயுத முறையில் அடக்க முனையோம் என்றெல்லாம் ‘ உருத்திராட்சப் பூனையாக’ சிங்களத் தலைமைகள் இன்று மீண்டும் மீண்டும் உரைக்கின்றன என்றால், அதற்கு முக்கியமான - ஒரே - காரணம், புலிகளின் ஆயுத வலிமையின் மீது, உறுதியாக நிறுத்தப்பட்டிருக்கும் தமிழரின் அரசியல் பலம்தான்.

தங்களின் நியாயமான எதிர்பார்ப்புக்கு நீதியான தீர்வை சாத்வீக வழியில் தமிழர் எதிர்பார்த்த போது, வன்முறை அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது. அவர்களின் நியாயமான கோரிக்கை தென்னிலங்கைச் சிங்களத்தின் காதில் சரியாக விழவில்லை; சரியாக ஏறவில்லை.

ஆனால், வன்முறைக்கு வன்முறையால் பதில் உரைத்தபோது அது தென்னிலங்கைத் தலைமையின் அடிமனம் வரை ஆழமாக உறைத்தது; நியாயத் தீர்வை வழங்கியேயாக வேண்டும் என்ற உணர்வை உசுப்பேற்றிவிட்டது.

எனவே, இன்று புலிகளின் இராணுவ வலிமையை பலவீனப்படுத்துவது என்பது தமிழர்களின் அரசியல் பலத்தைப் பலவீனப்படுத்துவதுதான்.

அதனால்தான் புலிகளைப் பலவீனப்படுத்த ஒட்டுப்படைகளின் பெயரால் அரசுப் படைகளின் புலனாய்வுத் துறை எடுக்கும் முன் முயற்சிகளை முழுத் தமிழ்ச் சமூகமுமே ஒன்றுதிரண்டு எதிர்க்கின்றது.

# சகல அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனை

## ஏற்பாடு செய்யப்படும் என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

வடமராட்சி,ஒக்.19

யாழ். மாவட்டத்திலுள்ள நோயாளர்களின் சிரமங்களைப் போக்கவும் முக்கியமான வைத்தியசாலைகளில் நோயாளர்களின் நெருக்கடிகளைத் தவிர்க்கும் முகமாகவும் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரசினர் வைத்தியசாலைகளிலும் நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனைகள், ஏற்புத் தடை ஊசி மருந்து ஏற்றுதல் போன்ற வசதிகள் விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தில் சுற்றயல்கூறு, வைத்தியசாலைகள், கிராமிய வைத்திய சாலைகள்,மத்திய மருந்தகங்கள், மாவட்ட வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள் என 38 அரசினர் வைத்தியசாலைகள் இயங்கிவருகின்றன. யாழ். போதனா வைத்தியசாலை இவற்றிலிருந்து விதி விலக்காகும்.

நீரிழிவு, இரத்த அழுத்தம் ஆகிய நோய்களிலிருந்து பாதிக்கப்பட்ட நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அதேபோல ஏற்புவலி நோய்க்கும் பலர் கணிசமான அளவில் இலக்காகுகின்றார்கள்.

இந்த நோயாளர்கள் ‘கிளினிக்’குகளுக்கும் ஏற்புத் தடை ஊசி மருந்தை ஏற்றிக்கொள்வதற்கும் மாவட்ட, ஆதார, போதனா வைத்தியசாலைகளையே நாடவேண்டியுள்ளது. இதனால், நோயாளர்கள் பெருஞ்சிரமத்துக்குள்ளாவதுடன் குறிப்பிட்ட வைத்திய சாலைகளிலும் நெருக்கடிகள் ஏற்படுகின்றன.

இவற்றைத் தவிர்க்கும் முகமாக யாழ். மாவட்டத்திலுள்ள சிறு வைத்தியசாலைகள் உள்ளிட்ட அனைத்து வைத்தியசாலைகளிலும் நீரிழிவு, இரத்த அழுத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

ஏற்புத் தடுப்பு ஊசி மருந்துகளை வைத்துப் பாதுகாக்க குளிரூட்டிகள் வழங்கப்படுவதுடன், ஏற்புத் தடுப்பு ஊசி மருந்து ஏற்றுவதற்கும் உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் குடாநாட்டில் நோயாளர்களுக்கு இருந்துவரும் சிரமங்கள் நீங்கும் என்று சுகாதாரப் பணிப்பாளர் கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

(த-173)

# கட்டு மரங்களில் தொழில் புரிவோருக்கும் படகு வழங்குமாறு அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.19

ஏற்கனவே கட்டுமரங்களில் தொழில் புரியும் மீனவர்களுக்கும் கண்ணாடி நாரிழைப் படகுகளை வழங்குமாறு யாழ். அரச அதிபர் கே.கணேஸ் சம்பந்தப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அரச அதிபர் கருத்துத் தெரிவித்தபோது:-

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டக் கடற்றொழிலாளர்களுக்குப் படகுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவர்களில் பல மீனவர்கள் பழமையான மீன்பிடி உபகரணமான கட்டு மரங்களையே பாவித்துவந்தனர். சிலர் தற்போதும் கட்டுமரங்களைப் பயன்படுத்தித் தொழிலை மேற்கொள்கின்றனர்



இந்த மீனவர்களுக்கும் கண்ணாடி நாரிழைப் படகுகளை வழங்குவதன் மூலம் யாழ். மாவட்டத்தில் மீன்பிடித்துறையை மேம்படுத்தமுடியும்.

எனவே, படகு வழங்கும் நிறுவனங்கள் இதனைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும் என அந்த நிறுவனங்களைக் கேட்டுள்ளேன் - என்றார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கென வழங்கப்படும் சகல உதவிகளும் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைகின்றனவா எனக் கடற்றொழில் சங்கங்கள் உறுதிப்படுத்தி அறியவேண்டும் எனவும் கூறியுள்ளேன் -என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

(த-202-203)

# வடமராட்சி வலயத்தில் 113 மாணவர்கள் சித்தி!

வடமராட்சி,ஒக்.19

அண்மையில் வெளியான 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின்படி வடமராட்சிக் கல்வி வலயத்தில் 113 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களில் கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் 63 மாணவர்களும் பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்தில் 49 மாணவர்களும் மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் ஒரு மாணவரும் சித்தியடைந்துள்ளனர்.

கரவெட்டிக் கல்விக் கோட்டத்தில் சித்தியடைந்த 63 மாணவர்களில் அதிகப்படியாக கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தைச் சேர்ந்த 14 மாணவர்கள் சித்தியடைந்தனர். (த-173)

## நாளை

ஐப்பசி 3
வியாழக்கிழமை
20.10.2005
திதி: திருதியை
பிற்பகல்: 3.58 வரை
நட்சத்திரம்: கார்த்திகை
மாலை: 6.05 வரை
சுபநேரம்: 7.32 - 9.02
ராகுகாலம்: 1.32 - 3.02
(யாவும் பழைய நேரப்படி)

# வல்லிபுரத் தேர், தீர்த்தங்களில் 60 பவுண் நகைகள் அபேஸ்!

வடமராட்சி,ஒக்.19

பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் தேர், தீர்த்த உற்சவங்களின்போது 60 பவுண் தங்க நகைகள் திருட்டுப்போயுள்ளன.


சனநெரிசலைப் பயன்படுத்தி கோயில் சுற்றாடலில் நடமாடிய திருடர்கள் தேர்த்திருவிழா அன்று 40 பவுண் தங்க நகைகளையும் சமுத்திரத் தீர்த்த உற்சவ தினத்தன்று 20 பவுண் தங்க நகைகளையும் பக்தர்களிடம் இருந்து அபகரித்திருக்கின்றனர்.

இந்தத் திருட்டுக்கள் தொடர்பாக கோயிலில் ஏற்படுத்தப்பட்டிருந்த பிரதேச செயலகத்தின் தற்காலிக அலுவலகத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

(த-173)

## உதயவாக்கு

தன்னம்பிக்கை என்பது சாதாரணமாகத் தோன்றினாலும் அது வெற்றிக்கு இன்றியமையாத ஒன்று.
- ஓர் அறிஞர்.



# கழிவுத் தேயிலைத்தூள் கடத்திய மூவர் பொலீஸாரிடம் சிக்கினர்

## கலப்படம் செய்து விற்பவர்கள் எனச் சந்தேகம்

கொழும்பு,ஒக்.19

பாவனைக்கு உதவாத கழிவுத் தேயிலைத் தூள் அடங்கிய மூடைகளை லொறியில் ஏற்றிச் சென்ற மூன்று நபர்களை சந்தேகத்தின் பேரில் கம்பளைப் பொலீஸார் கைது செய்தனர்.

நாவலப்பிட்டியிலுள்ள தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து எடுத்து வரப்பட்ட சுமார் 200 மூடைகளில் 2 ஆயிரம் கிலோ கழிவுத் தேயிலைத்தூள் இருந்தது. கம்பளை மாவட்டத்தில் இருக்கும் தேயிலை தொழிற்சாலைகளில் இருந்து சிலர் இவ்வாறு கழிவுத் தேயிலைத் தூளை எடுத்துச் சென்று அவற்றோடு சுண்ணாம்புச் சாம்பல் கலந்து அவித் தெடுத்து பின்னர் அவற்றோடு சில இரசாயனத் திரவங்களைக் கலந்து மக்கள் பாவனைக்கென விற்று வருகின்றனர் என்று கிடைத்த தகவலையடுத்து பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கையிலேயே இம் மூவரும் பிடிபட்டனர்.

சுண்ணாம்புச் சாம்பலைக் கலந்து அவித்தெடுப்பதன் மூலம் தேயிலையில் சாயத் தன்மை அதிகரிப்பதாகவும் - மக்களின் உடல் நலத்தைப் பாதிக்கும் இவ்வாறான செயற்பாடுகள் நீண்டகாலமாக இடம் பெற்று வருவதாகவும் - தெரியவந்துள்ளது-

கைப்பற்றப்பட்டுள்ள கழிவுத் தேயிலை அவ்வாறு தயார் செய்து மக்களின் பாவனைக்கு விடுவதற்காகக் கொண்டு செல்லப்பட்டிருக்கலாமென பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

தேயிலையை எடுத்துச் செல்வதற்குரிய சட்டபூர்வ அனுமதிப் பத்திரமும் இச் சந்தேக நபர்கள் வசம் இருக்கவில்லை. வேறு ஒருவரின் பெயரில் பெறப்பட்டிருந்த காலாவதியான அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தியே இந்தத் தேயிலை மூடைகள் எடுத்து வரப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(ஒ-206)

# மஹிந்த மற்றும் ரணில் பெயர்கள் வாக்குச் சீட்டில் அடுத்தடுத்து

கொழும்பு,ஒக்.19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் வாக்குச்சீட்டில் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ பெயருக்கு அடுத்ததாக ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் அச்சிடப்பட்டிருக்கும் என்று கூறப்படுகின்றது.

அதற்கமைய முக்கிய இரு வேட்பாளர்களான மஹிந்த ராஜபக்ஸ மற்றும் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர்கள் முறையே 09 மற்றும் 10 ஆவது இடங்களில் அச்சிடப்படவுள்ளன. வேட்பாளர்களின் பெயர்கள் ஆங்கில அகரவரிசைப்படி ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய வேட்பாளர்களின் பெயர்களும் சின்னங்களும் வருமாறு:-

விமல் கீகனகே - ஸ்ரீலங்கா தேசிய முன்னணி (கிரிக்கெட் மட்), விமல் ஜயநெத்தி புதிய இடதுசாரிகள் முன்னணி (மேசை), ஜயவீர ஆரச்சிகே ஏ.கே. ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி (இரட்டைஇலைகள்) சிறிதுங்க ஜயசூரிய ஐக்கிய சோஸலிஸக் கட்சி (முச்சக்கரவண்டி), ஜே.ஏ.பி.நெல்சன் பெரேரா, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி (பூச்சாடி) விஜேடயஸ் சோஸலிஸ சமதர்மக் கட்சி (கத்தரிக்கோல்) அனுர சரத் டி சில்வா, ஐக்கிய லலித் முன்னணி (அன்னப்பறவை) அருண சொய்சா றுகுணுமக்கள் கட்சி (மோட்டார் கார்), பர்ஸி மஹிந்த ராஜபக்ஸ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (வெற்றிலை) ரணில் விக்கிரமசிங்க - ஐக்கிய தேசியக் கட்சி (யானை) அஷல அசோக சுரவீர - தேசிய அபிவிருத்தி முன்னணி (தேங்காய்), விக்ரர் ஹெட்டிகொட சில்வா விஜேதாஸ ஐக்கிய இலங்கை பொதுமக்கள் கட்சி (தேநீர் கோப்பை), சாந்த தர்மத்துவஜ ஐக்கிய தேசிய மாற்று முன்னணி (நுளைவாயிலில் கதவு)

(ஒ-206)


அமெரிக்கன் DV 2007 லொத்தர் விசாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன



DV 2006 இற்கான எமது நிறுவனம் மூலம் விண்ணப்பத்த வர்களில் பலருக்கு விசா கிடைத்துள்ளதை மிகவும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

அதேவேளை DV 2007 இற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 2"x2" கலர் படம் ஒன்றுடன் எமது நிறுவனங்களுக்கு உடன் சமூகம் தரவும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

38, செல்லப்பிள்ளையார் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993


## சங்கானை கரைச்சி மயானப் புனரமைப்பு பணிகள் பூர்த்தி

சங்கானை கரைச்சி மயானத்தில் தகனக் கிரியை மண்டபம், பொதுமக்கள் தங்கும் மண்டபம் ஆகியவை புனரமைக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக தகனக் கிரியைகளுக்காக மயானத்திற்கு செல்லும் மக்களின் சிரமங்கள் இதனால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று சங்கானை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் இ.சச்சிதானந்தம் தெரிவித்தார்.

(ஒ-29)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்
தரம் 5 புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த
1.செல்வன் செந்திற்செல்வன் அமணன் - 140 புள்ளிகள்
2.செல்வி சிறிகணநாதன் வைஷ்ணவி - 138 புள்ளிகள்
ஆகியோரையும் கற்பித்த ஆசிரியர்களையும்
மகிழ்ச்சியுடன் பாராட்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(41660)(54-18-16-11)


## விபத்தில் காயம்!

மட்டுவில் வண்ணாத்திப் பாலத்தில் மோட்டார் சைக்கிள் சக்கரம் சறுக்கியதில் தூக்கி வீசப்பட்ட சாரதி கம்பங்களுடன் மோதிக் காயமடைந்தார்.

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த 24 வயதான அந்த இளைஞர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

(ஒ-117)

## கண்ணீர் அஞ்சலி

எமது சகோதரப் பாடசாலையின்

அதிபர் க. இராசதுரை



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவிகள் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(41661) (54-18-16-11)

# கல்விச்சாலைக் காட்சிகள்



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவின்போது ஓய்வு பெற்ற அதிபர் செ.சோதிப்பெருமாள் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்த போது எடுக்கப்பட்ட படம் இது. தமிழ்த்துறை ஆசிரியை திருமதி மகாலிங்கசிவம், கல்லூரி அதிபர் திருமதி ஆனந்திசிவஞானசுந்தரம் மற்றும் ஆசிரியைகள், மாணவர்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம்:- வலிகாமம் தெற்கு செய்தியாளர்)



பண்ணாகம் பல்லசுட்டி காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி. சிவநேசன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதைப்படத்தில் காணலாம். நிலையத் தலைவர் செ. செல்வகுமாரும் படத்தில் காணப்படுகின்றார்.

(படம்:- வலி. தென்மேற்கு செய்தியாளர் )



பொலிகண்டியிலுள்ள முன்பள்ளி சிறார்களுக்கு இரட்சண்ய சேனை அமைப்பின் சார்பில் அதன் பிரதிநிதி, பாடசாலைப் பைகளை வழங்குவதைப் படத்தில் காணலாம்

(படம்:- வடமராட்சி செய்தியாளர்)




லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் புதிய மாணவர் வரவேற்பு நிகழ்வின் போது முதலாம் வருட ஆண்டிறுதிப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு முன்னாள் அதிபர் டாக்டர் ஜெகோரத்தினம் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. கல்லூரி அதிபர் டாக்டர் திருமதி க. பரமசிவம் இப்பரிசில்களை வழங்கினார். இந்த நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது.

# மழை முகிலால் சந்திர கிரகணம் தென்படவில்லை!

சென்னை,ஒக்.19

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதால் சந்திர கிரகணத்தை நேற்றுமுன்தினம் பார்க்கமுடியவில்லை. மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருந்த மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர்.

சூரியன், பூமி மற்றும் சந்திரன் ஆகியவை ஒரே நேர் கோட்டில் சந்திக்கும் போது சந்திர கிரகணம் ஏற்படும். நேற்று முன்தினம் ஏற்பட்ட சந்திர கிரகணம், உலகளவில் பிற்பகல் 3.21 மணி முதல் 7.45 மணி வரையும் சென்னையில் மாலை 5.44 மணி முதல் 6.03 மணி வரை குறைந்த நேரமே தெரியும் என்று பி.எம்.பிர்லா கோளரங்க அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். கிரகணத்தைக் காண பி.எம்.பிர்லா கோளரங்கத்தில் பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

சிறிது நேரமே சந்திரகிரகணம் தெரிந்ததால் அதை காண ஏராளமான மக்கள் பிர்லா கோளரங்கத்தில் ஆவலுடன் காத்திருந்தனர். கடந்த சில தினங்களாக தெளிவாக இருந்த வானம் நேற்றுமுன்தினம் திடீரென மேகமூட்டத்தால் சூழப்பட்டு சந்திர கிரகணத்தை காணமுடியவில்லை. இதனால் காத்திருந்த மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர்.

அடுத்த சந்திரகிரகணம் 2006ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7ஆம் தேதி நிகழும் என்றும், அடுத்த சூரியகிரகணம் 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி நிகழும் என்றும் பி.எம்.பிர்லா கோளரங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)



சந்திரகிரணத்தைக் காண்பதற்கு சென்னையில் கூடியிருந்த மக்களில் ஒரு பகுதியினரையும் மழை முகில்களுக்கு ஊடாக சந்திரன் தென்படுவதையும் படங்களில் காணலாம்.

# அமெரிக்கா - பிரிட்டன் - இந்தியா - ரஷ்யா இணைந்து அடுத்த ஆண்டு கூட்டுப்பயிற்சி

புதுடில்லி,ஒக்.19

அமெரிக்க-இந்திய-ரஷ்யா-பிரிட்டன் ஆகிய நாடுகளின் சிறப்பு படைகளின் கூட்டுப் பயிற்சி ரஷ்யாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை ரஷ்யா மேற்கொள்ளும் என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் சஞ்சய் யுவனோவ் டெல்லியில் ஊடகவியலாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் தெரிவித்தார்.

இந்தியாவில் மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட யுவனோவ், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

இரண்டு நாடுகளுக்கிடையில் கூட்டுச் சிறப்புப் படைப் பயிற்சி ஏற்கனவே நடந்திருந்தாலும், அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா, இந்தியா ஆகிய நான்கு நாடுகளின் சிறப்பு படைகளின் போர்ப் பயிற்சி மிகப் பெரிய அளவில் நடைபெறவுள்ளது இதுவே முதல் முறையாகும். தீவிரவாதம் பரவி வருவதை தடுக்கும் விதத்தில் இந்தக் கூட்டுப்பயிற்சி இருக்கும் எனவும் யுவனோவ் மேலும் தெரிவித்தார். (க)

## 9வயது மாணவன் சாதனை

சான்பிரான்சிஸ்கோவிலுள்ள அல்காட்ராஸ் சிறைக்கும் கடற்கரைக்கும் இடையிலிருக்கும் குளிர்மிகுந்த சுறாக்கள் நிறைந்த கடற் பகுதியை ஒன்பது வயது சிறுவன் ஒருவன் வெற்றிகரமாக நீந்தி சாதனை படைத்துள்ளான்.

சான்பிரான்சிஸ்கோ நகரின் மேற்குக் கரையில் உள்ள தீவில் இந்த சிறைச்சாலை இருக்கிறது. இச்சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற பல குற்றக்கைதிகள் கரை சேர்ந்ததாகவே தகவல் இல்லை. கடல் குளிரினால் விறைத்துப்போனார்கள் அல்லது சுறா மீன்களுக்கு இரையாகிவிட்டார்கள்.

இந்த நீர்ப்பகுதியை முதன் முதல் வெற்றிகரமாக நீந்திக் கரைசேர்ந்தவன் என்ற பெருமையை ஜொனி வில்சன் என்ற பள்ளி மாணவன் பெற்றுள்ளான். (ப)

# அஸாமில் பழங்குடியினர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

## 34 பேர் வெட்டிக்கொலை

இந்தியாவின் அஸாம் மாநிலத்தில் அடையாளம் தெரியாத தீவிரவாதிகளால் கார்பி பழங்குடியின மக்கள் 34 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர்.

மத்திய அஸாமில் கார்பி ஓங்லாங் மாவட்டம் உள்ளது. இந்த மாவட்டத்தில் பெரும்பாலும் கார்பிகள் என்று அழைக்கப்படும் பழங்குடியின மக்கள் தான் அதிகமாக வசித்து வருகின்றனர். இந்தக் கார்பி இன மக்களுக்கும் அங்கு வசித்து வரும் மற்றொரு பழங்குடி இனமான திமாஸா பிரிவு மக்களுக்கும் இடையில் அடிக்கடி இனக்கலவரங்கள் ஏற்படுவதுண்டு. இதனால், இந்த சமூகத்தினரிடையே அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டு வந்தன. இதில் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் சிலர், கார்பி இன மக்கள் 34 பேரை கொடூரமாக வெட்டிக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இது அந்தப் பகுதியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பயணிகள் பஸ் ஒன்றையும், மாவட்டத் தலைமையகத்துக்குச் சென்றுக்கொண்டிருந்த பஸ் ஒன்றையும் முகமூடி அணிந்த அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் வழிமறித்து அதில் பயணம் செய்த கார்பி இன மக்களை இனங்கண்டு அவர்களை பஸ்சில் இருந்து கீழே இறக்கி கொடூரமான முறையில் வெட்டிக்கொன்றனர்.

இரண்டு பஸ்களையும் தீயிட்டுக் கொளுத்திய பின் தீவிரவாதிகள் தப்பியோடிவிட்டனர் எனத் பொலீஸார் தெரிவித்தனர். (க)

## துருக்கியில் நில நடுக்கம்

துருக்கியில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 6 பேர் படுகாயமடைந்தனர்; பல கட்டடங்கள் சேதங்களுக்கு உள்ளாகின. மக்கள் அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறினர்.

துருக்கியின் இஸ்மிர் நகரிலும் இதையடுத்துள்ள ஏஜியான் கடற்கரைப்பகுதிகளிலும் நில நடுக்கம் ஏற்பட்டது. கட்டடங்கள் பல சேதமடைந்தன. மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். நீண்டநேரத்தின் பின் மக்கள் மீண்டும் வீடுகளுக்குத் திரும்பினர்.

நில நடுக்கம் ரிச்டர் அளவில் 5.9 புள்ளியாக பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

1999 ஆம் ஆண்டு துருக்கியில் ஏற்பட்ட பெரும் பூகம்பத்தில் 18ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொலம்பியாவில் தீவிரவாதிகள் திடீர் முற்றுகைத். தாக்குதல்!

பொகோடா, ஒக்.19

கொலம்பியாவில் தீவிரவாதிகளுக்கும் கொலம்பிய இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற கடும் மோதல்களில் 7 கொலம்பிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். தீவிரவாதிகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாக கொலம்பிய இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

கொலம்பியாவில் தேர்தல் இடம்பெறவுள்ளதையடுத்து அங்கு வன்முறைகள் அதிகரித்துள்ளன.

பனாமா எல்லைப் பகுதியில் தீவிரவாதிகள் கொலம்பிய இராணுவத்தின் மீதுமுற்றுகைத் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். இங்கு இருநூறு இராணுவத்தினர்வரை முற்றுகைக்குள்ளாகினர். இரு தரப்புக்கும் இடையில் சுமார் 60 மணித்தியாலங்கள் வரை கடும் சமர் நடைபெற்றது.

கொலம்பிய இராணுவத்தினர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் அதிரடித்தாக்குதல் நடத்தி தீவிரவாதிகளை விரட்டியடித்தனர் என கொலம்பிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் நடவடிக்கையில் 7 கொலம்பிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

# ஈக்குவடோர் நாட்டின் அதிபர் ஊழல் குற்றச்சாட்டில் கைது!

குவிட்டோ,ஒக்.19

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்குவடோர் நாட்டின் முன்னாள் அதிபர் லூசியோ கூட்ரியரங் ஊழல் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஈக்குவடோரில் கடந்த ஏப்ரல் மாதம் அரசுக்கு எதிரான புரட்சியில் மக்கள் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அதிபர் லூசியோ பதவிவிலகினார். அவர் தனது குடும்பத்தவருடன் கொலம்பியாவிற்குத் தப்பிச் சென்றார்.

இதையடுத்து அங்கு புதிய ஆட்சி அமைக்கப்பட்டது. பதவி விலகித் தப்பிஓடிய அதிபர் மீது ராஜதுரோகம் மற்றும் ஊழல் வழக்குகள் தொடரப்பட்டன.

முன்னாள் அதிபர் லூசியோ கொலம்பியாவில் இருந்து தனி விமானம் மூலம் ஈக்குவடோர் திரும்பினார். அவர் விமானத்தை விட்டு வெளியே வந்ததும் தயாராக நின்ற பொலீஸார் அவரைக் கைதுசெய்தனர். அவரை உடனடியாக ஹெலிகொப்டரில் ஏற்றி அங்குள்ள சிறைச்சாலையொன்றில் அவர் அடைக்கப்பட்டார்.

விமான நிலையத்தில் அவரது ஆதரவாளர்கள் ஏராளமானோர் கூடிநின்று பொலீஸாருக்கு எதிராகக் கோஷமிட்டனர். பொலீஸார் அவர்களைத் தடியடி நடத்தி கலைத்தனர். (க)

# பலஸ்தீனத்துடனான தொடர்புகளை இடைநிறுத்தியது இஸ்ரேல்

ஜெருசலேம், ஒக். 19

இஸ்ரேலியர்கள் மீது பலஸ்தீனத் தீவிரவாதிகள் நடத்திவரும் தாக்குதலையடுத்து, பலஸ்தீன நிர்வாகப் பாதுகாப்பு அதிகாரிகளுடனான தொடர்புகளை இஸ்ரேல் இடை நிறுத்தியுள்ளது.

பலஸ்தீன மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேலியர்கள் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டுள்ளது. மேற்குக் கரைப்பகுதியில் பலஸ்தீனர்களின் நடமாட்டத்திலும் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இது தவிர பலஸ்தீன தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளையும் சோதனைகளையும் இஸ்ரேல் படைகள் மேற்கொண்டு வருகின்றன.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் மற்றும் பலஸ்தீனப் பிரதமர் முகமத் அப்பாஸ் இடையிலான உயர் நிலைச் சந்திப்புக்கு தயார் செய்வதற்காக இருதரப்பு அதிகாரிகளும் அடுத்த சில நாள்களில் சந்தித்து பேச இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)






# பூகம்பம் தாக்கிய பகுதியில் கொள்ளை நோய் அபாயம்

முஸாபராபாத்,ஒக்.19

பூகம்பத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட காஷ்மீர் பலாகோட் பகுதியில் பூகம்பத்தில் தப்பிய ஆனால், வெட்ட வெளியில் தங்கியிருக்கும் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்க கூடிய ஆபத்து இருப்பதாக உதவிக்கு சென்ற பிரான்ஸ் டாக்டர் ஒருவரும் பாகிஸ்தானிய டாக்டரும் கூறுகின்றனர்.

அங்குள்ள மக்களுக்கு குளிர் காய்ச்சல், மூச்சிரைப்பு, மார்புச்சளி, ஆஸ்துமா, வயிற்றுப்போக்கு போன்ற வியாதிகள் அதிகமாகிவிட்டன. நல்ல உணவு, குடிதண்ணீர் இல்லாமல் ஏராளமானோர் பலவீனமடைந்துள்ளனர். தங்குவதற்கு இனியும் இடம் இல்லாவிட்டால் மேலும் பலருக்கு வியாதி பரவும் ஆபத்து இருக்கிறது என்று இருவரும் அச்சம் தெரிவித்தனர்.

இதேவேளை - பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்த 200 ஜவான்களின் சடலங்கள் பாகிஸ்தான் இராணுவத்தால் இன்னமும் மீட்க முடியவில்லை. இதை பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் ஜாவித் அஷ்ரப் காஜி தெரிவித்தார்.

நிவாரணப் பணியில் இராணுவம் தீவிரம் காட்டவில்லை. அரசு உதவிக்கு வரவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறிய குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

பூகம்பம் நேரிட்டவுடன் அரசு பள்ளிக்கூட கட்டடங்கள் சீட்டுக்கட்டைபோல எல்லா ஊரிலும் சரிந்ததில் இருந்தே, கட்டுமானத்தில் நடத்த ஊழல் அம்பலமாகிவிட்டது என்று எதிர்க்கட்சித் தலைவர் மெஹமூது கான் அசாக்சாப் பாகிஸ்தான் அரசைக் கண்டித்தார். (ஐ)

## B.Sc. வெளிவாரி காமராஜர் பல்கலைக்கழகம்

★ மேற்குறிப்பிட்ட பட்டநெறிக்கு A/L இல் கணிதப் பிரிவில் குறைந்த சித்தி எய்தியவர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ இக்கற்கை நெறிக்குரிய பதிவுகளும் பரீட்சை விண்ணப்பங்களும் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும்.
★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 29-10-2005 காலை 9 மணி.
குறிப்பு: இக்கற்கை நெறிக்குரிய பரீட்சைகளை யாழ்ப்பாணத்திலும் நடத்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

யாழ். இணைப்பாளர்-
S.அருள்நங்கை
(41633) (24-26-15-17)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சுசிந்திரகுமார் வசீகரன்

*பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவன்*
**சுசிந்திரகுமார் வசீகரன்**
*இந்த ஆண்டு (2005) நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 133 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.*
*இவர் மேலும் பல்கலையும் கற்று பல பட்டங்கள் பெற வேண்டும் என வாழ்த்துகிறோம்.*
*அத்துடன், இவரின் பாடசாலை ஆசிரியர் தங்கராசா மாமா மற்றும் பாடசாலை ஆசிரியை நந்தகுமாரி அவர்களுக்கும் எங்கள் குடும்பம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.*

ஜெயானந்தன் உதிரிப்பாக விற்பனை நிலையம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.
(சி-45661) (39-26-11)
**குடும்பத்தினர்.**

## உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



சி.சாரங்கன்

யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவனும் திரு.வே.அன்புழகன் ஆசிரியரின் மாணவனும் திரு.திருமதி சிவபாஸ்கரன் தம்பதியரின் செல்வப் புதல்வனுமாகிய செல்வன் சி.சாரங்கன் 2005 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தியமையைப் பாராட்டுவதுடன், மேலும் பல்கலையும் கற்று வாழ்வில் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: வானத்தில் இருந்து வண்ணமுற வாழ்த்தும் பெரியப்பா மற்றும் பெரியம்மா, கௌரி அக்கா, ஸ்ரீ அண்ணா, மாதங்கி அக்கா, பிருந்தாக்கா, அப்பப்பா, அம்மம்மா, கனடாவில் வசிக்கும் மாமா, மாமி, மச்சாள்மார், மச்சான்.

(41537) (42-26-11)

## நினைவஞ்சலி

10 ஆம் ஆண்டு



அமரர் துரைச்செல்வம் ஜீனத்
கப்டன் நீலவண்ணன் (*நிருபன்*)
ஜனனம் 15.12.1977
வீரமரணம் 19.10.1995

13 ஆம் ஆண்டு



அம்பலவாணர் துரைச்செல்வம்
தோற்றம் 19.02.1948
மறைவு 25.12.1992

ஆண்டுகளோ பத்து- அரை
நொடிப்பொழுதிற் போயிற்று
தாண்டவம் ஆடிநின்றாலும்- மாண்டார்
மீண்டும் வந்துதிப்பாரோ- இம்மாநிலத்தே
செங்களம் ஆடி வீழ்ந்திட்ட வீரமறவன்-நீலவண்ணனும்
அவன் தந்தை கண்ணாடி வாத்தியாருக்கும்
இவ்வரிகளை காணிக்கையாக்குகின்றோம்.

விசுவமடு.
(41213) (39-26-15-17)
**நண்பர்கள், மாணவர்கள்.**

## சாரண மாணவர்கள் சிரமதானப்பணி

வடமராட்சி,ஒக்.19

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய சாரண மாணவர்கள் ஜனாதிபதி விருதுக்கான செயல்திட்டமாக பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இரு தினங்களாக சிரமதானப்பணிகளை மேற்கொண்டார்கள்.

இச்சிரமதானப் பணிகளின் போது வைத்தியசாலை வளவில் உள்ள புல் பூண்டுகள், பரவலாகக் காணப்பட்ட கற்கள், வெற்றுப் போத்தல்கள் யாவும் அகற்றப்பட்டதுடன், குப்பை கூளங்களும் குழிவெட்டிப் புதைக்கப்பட்டன.

சாரணர் கொடியேற்றத்துடன் ஆரம்பமாக்கப்பட்ட சிரமதானப்பணி கொடி இறக்கத்துடன் நிறைவுற்றது. (த-173)

## இடமாற்றம் பெற்ற அலுவலர்களுக்குப் பிரியாவிடை

யாழ்ப்பாணம்,ஒக்.19

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற 5 அலுவலர்களுக்கு கடந்த 7 ஆம் திகதி பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது.

ஊழியர் நலன்புரிச் சங்கத் தலைவர் ஜி.ரட்ணராஜா தலைமையில் விழா இடம் பெற்றது: வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இடமாற்றம் பெற்றுச்சென்ற செல்வி த.தாட்சாயினி, ச.கமலகாந், திருமதி எஸ்.சூரியகுமாரி, திருமதி பேபி சுலோசனா சுகுமார், செல்வி து.அகல்யா ஆகியோர் கௌரவிக்கப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.(த-185)

## கலாசாரப் பேரவைப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாசாரப் பேரவை உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தவர்கள், கலாசார அலுவலர்கள், யாப்புக்குழு அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் கேட்டுள்ளார். (த-202-204)

## 'ஸ்கிறபிள்' சங்கம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.மாவட்டத்தில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு யாழ். மாவட்ட 'ஸ்கிறபிள்' சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கை ஸ்கிறபிள் லீக்கின் தலைவர் வைத்திய நிபுணர் எல்.எம். அமரசிங்க கலந்துகொண்டார். (த-202)


## பெக் லோடட் பவர் ஸ்ப்ரேயர்



General Equipments Limited
400, Sri Sangaraja Mawatha, Colombo 12.
Tel: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799
Fax: 2434637


## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 11 - 11 - 1928



உதிர்வு 23 - 10 - 2002

### அமரர் கனகசபை பினாகபாணி

*(ஓய்வு பெற்ற அதிபர், யாழ்.வண். வைத்திலிங்க வித்தியாலயம்)*

ஆண்டுகள் மூன்று மறைந்தாலும்
ஆறாது எங்கள் துயரம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

62/2 , இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(41640)(26-15-17)
உங்களை மறவாத
- **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



### இராஜரட்ணம் துரைச்சாமி (சோதி)

*(ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர், உணவுத் திணைக்களம்)*

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் துரைச்சாமி (சோதி) அவர்கள் 17.10.2005 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜரட்ணம் பெரியம்மாவின் அன்பு மகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ராஜலட்சுமியின் அன்புத் தந்தையும் ராஜசேகரத்தின் மாமனாரும் ரூபியின் வளர்ப்புத் தந்தையும் முருகையா (Australia), குலசேகரம் (Australia), குலத்துங்கம் (London), அழகேந்திரா (Colombo), காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற பராசக்தி (ராசாத்தி)யின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.10.2005 திங்கட்கிழமை பி.ப. 4 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**R.R. மோட்டேர்ஸ்,**
**மானிப்பாய்.**
(41636)(26-15-17)
தகவல்:
**ராஜசேகரன்(மருமகன்).**



### கந்தையா தவபத்மசிங்கம்

*(நில அளவையாளர்)*

உரும்பிராய்கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்து வந்தவருமான கந்தையா தவபத்மசிங்கம் 16-10-2005 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சரஸ்வதியின் அன்புமகனும் வண்ணார்பண்ணை, தட்டாதெருவை வசிப்பிடமாகக்கொண்ட காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம் - பாக்கியலக்சுமியின் மருமகனும் சுனேந்திராவின் அன்புக்கணவரும் பைரவியின் அன்புத்தந்தையும் கனடாவை வசிப்பிடமாகக்கொண்டவர்களான சரவணபவன், சறோஜினிதேவி, விமலாதேவி ஆகியோரின் சகோதரரும், சிவகுமார், தவக்குமார், ஜெயக்குமார், உதயகுமார், விஜயகுமார், சத்திகுமார், மேகலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நாளை (20-10-2005) வியாழக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**548, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
(41634)(26-15-17)
தகவல்:-
**-மைத்துனர் பூ.சுரேஸ்.**


## இன்று (19.10.2005) கோலாகலமான திறப்பு விழா !



பூமியில் புதிதாக கால் பதிக்கும்
உங்கள் குழந்தையை வரவேற்க ...

**Mother And Baby Care**

குழந்தைகளுக்கான
* பால்மா வகைகள்
* உடைகள்
* விளையாட்டுப் பொருள்கள்

உட்பட உங்கள் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்தையும் மற்றும் தாய்மாருக்கான பொருள்களையும் ஒரே கூரையின்கீழ் அதிசயிக்கத்தக்க மலிவு விலையில் பெற்றுக் கொள்ளநம்பிக்கையான ஸ்தாபனம்



(41641) (11-34)

**Mother And Baby Care**
**108/1, Palaly Road, Thirunelvely. T.P: 0717556677**

# 'சண்டே லீடர்' அச்சக எரிப்புக்கு ஐ.தே.கட்சி கடும் கண்டனம்

கொழும்பு, ஒக்.19

'சண்டே லீடர்' பத்திரிகையின் அச்சகத்திற்குத் தீ வைத்த சம்பவத்திற்கு அரசே பொறுப்பு. தனது பிழைகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்களைத் தாக்குவதும், பிழைகளை மூடிமறைக்கும் ஊடகங்களை அரவணைப்பதும் அரசின் பொதுவான செயலாகும். இத்தீவைப்புச் சம்பவத்தை ஐ.தே.க. வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாகக் கைதுசெய்து ஊடகங்களின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறது.

- இவ்வாறு ஐ.தே.கவின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சத்சிறி ஜயசேகர தெரிவித்தார். கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது:-

கடந்த ஒன்றரை வருடங்களாக சுதந்திர ஊடகங்கள் இவ்வாறு தாக்கப்பட்டுக்கொண்டே வருகின்றன. இந்த அரசின் ஆட்சியில் பல ஊடகங்கள் தாக்கப்பட்டுள்ளன. பல ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டும் உள்ளனர்.

அண்மையில் 'சுடர் ஒளி' பத்திரிகை தாக்கப்பட்டதில்ஒருவர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்தனர். ஊடகங்கள் மீதான தாக்குதல் அத்தோடு நின்றுவிடவில்லை. இன்னும் தொடர்கிறது.

அரசின் பிழைகளைச் சுட்டிக்காட்டும் ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்துவதும் அரசின் பிழைகளை மூடிமறைக்கும் ஊடகங்களை ஆதரிப்பதும் அரசின் வழமையான செயலாகிவிட்டது. அரசின் இவ்வாறான செயற்பாடுகளினால் ஊடகங்களால் சுயமாக இயங்கமுடியாமல் உள்ளன.

'சண்டே லீடர்' பத்திரிகை ஐ.தே. கட்சி ஆதரவாகவும் அரசுக்கு எதிராகவும் செயற்படுவதன் காரணத்தாலேயே அதன் அச்சகம் தீ வைக்கப்பட்டது எனச் சொல்லப்படுகிறது.

உண்மையில் 'சண்டே லீடர்' ஐ.தே.கவுக்கு ஆதரவாகச் செயற்படவில்லை. பிழைகள் எந்தக் கட்சியில் உள்ளதோ அந்தக் கட்சியைச் சுட்டிக்காட்டியே செய்திகளை வெளியிடுகின்றது. கடந்த காலத்தில் ஐ.தே.கவின் பிழைகளையும் 'சண்டே லீடர்' சுட்டிக் காட்டியது. அந்த வகையில், அரசின் பக்கம் அதிக பிழைகள் இருப்பதையே அது இப்போது காட்டுகிறது. இதைப் பொறுக்கமுடியாத அரசு இவ்வாறு தாக்குதலை நடத்துகிறது.

இவ்வாறான தாக்குதல்கள் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும். ஊடகங்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும் - என அவர் மேலும் கூறினார்.

'சண்டேலீடர்' இரத்மலானையிலுள்ள அச்சகத்தினுள் ஞாயிறு இரவு திடீரெனப் புகுந்த கும்பலொன்று அங்கிருந்த பத்திரிகைகளுக்கு பெற்றோல் ஊற்றித் தீவைத்தது. அத்துடன், பத்திரிகையை அச்சிடும்பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களையும் மிரட்டியுள்ளது. இந்த அசம்பாவித்தின்போது நிறுவனத்தின் அச்சு இயந்திரமும் மிகச் சிறியளவில் சேதத்திற்குள்ளானது எனபொலீஸார் தெரிவித்தனர். (ஐ)

## பெண்களுக்கான கடற்றொழில் பயிற்சி

கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரியில் பெண்களுக்கான கடலக தொழில்நுட்பவியல் பயிற்சி இடம்பெறவுள்ளது.

மூன்று மாதங்களைக் கொண்ட இப் பயிற்சிநெறியைப் பயில விரும்பும் பெண்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் 'அதிபர், கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கல்லூரி, இல. 372, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (3-202)

## கோப்பாயில் சிறுவர் தினவிழா

கோப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் முதியோர், சிறுவர் தின நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (3-ரி-202)




மிருசுவில் கத்தோலிக்க கன்னியர் மட சிறுவர் நிலையத்தில் தங்கியுள்ள ஆதரவற்ற சிறுவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றை இலங்கை இராணுவத்தின் 55 ஆவது படையணியினர் கடந்த சனிக்கிழமை வழங்கினர். இந்நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
(படங்கள்: பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம், பலாலி)

## வலி.தெற்கில் மரக்காலைகளை பதிவுசெய்யுமாறு அறிவுறுத்து

வலி.தெற்கு,ஒக்.19

வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள சகல மரக்காலைகளையும் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் அறிவித்துள்ளார்.

மரக்காலைகள், அரிவாலைகள், தச்சுப் பட்டறைகள் போன்றவற்றின் உரிமையாளர்களுக்கு அவர் அனுப்பிவைத்துள்ள அறிவுறுத்தலில், குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமது நிறுவனங்களைப் பதிவுசெய்ய உரிமையாளர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பதிவுசெய்யாமல் இயங்கும் மரக்காலைகள் சட்ட விரோதமாக இயங்கும் மரக்காலைக ளாகக் கருதப்பட்டு, சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

வியாபாரப் பெயர்ப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இவை யாவும் பிரதேச செயகத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தாலும் வன பரிபாலனத் திணைக்களத்திலும் பதிவுசெய்யப்படவேண்டும்.

மரம்கொள்வனவு செய்தல், மரங்களை ஏற்றிச்செல்லல் போன்றவற்றின் போது ஏற்படும் சிரமங்களைத் தடுப்பதற்காக [illegible]காலைகளை உடன் பதிவுசெய்ய நடவடிக்[illegible]க்கு மாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-152)



சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினரால் அமரர் முத்துலிங்கம் இராசலட்சுமியின் 90ஆம் நாள் நினைவாகவும் சிறுவர் தினத்தை முன்னிட்டும் மருதனார்மடம் சிறுவர் இல்லத்துக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டன.. கல்வி உபகரணங்களைப் பெற்றுக்கொண்ட சிறுவர்களைப் படத்தில் காணலாம். (ஐ)

## சுன்னாகத்தைத் தளமாகக்கொண்டு பணிபுரியப் பதிவாளரை நியமிக்குக

வலி.தெற்கு,ஒக்.19

மக்கள் நலன்கருதி சுன்னாகத்தை மையமாகக் கொண்டு பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் ஒருவரை நியமனம் செய்யுமாறு வலிகாமம் தெற்குப் பிரதேச மக்கள் யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டப் பதிவாளர் நாயகத்திடம் கோரியுள்ளனர்.

தற்போது வி.வாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர் தாவடியில் தங்கியிருந்து பணிபுரிந்து வருவதால் குப்பிளான், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், கந்தரோடை போன்ற இடங்களில் உள்ள மக்கள் அதிக தூரம் சென்று தமது பதிவுகளை மேற்கொள்ளவேண்டி உள்ளது. எனவே, சுன்னாகத்தை மையமாகக் கொண்டு மேலதிகப் பதிவாளர் ஒருவரை நியமனம் செய்து தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-152)

## பன்முக நிதியில் வீதி புனரமைப்பு

அச்சுவேலி மாணிக்க இடைக்காடர் வீதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதிமூலம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்களாக இவ்வீதி திருத்தப்படாமல் இருந்தது. இப்பொழுது மேற்படி நிதிமூலம் வீதி செப்பனிடப்பட்டு, தார் ஊற்றப்பட்டுள்ளது.

இவ்வீதியால் மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், இடைக்காடு இந்து மயானம், விவசாய நிலங்கள் போன்றவற்றிற்குச் செல்வதற்கு இதுவரை மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இப்பொழுது இவ்வீதி திருத்தப்பட்டமை பெரும் உதவியாக இருப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (த-ரி-202)

## கடன் நிதியத்துக்கு உதவியாளர்கள் நியமனம்

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் 'உள்ளூர் கடன்கள் அபிவிருத்தி நிதியம்' 25 மாவட்டங்களுக்கும் 25 அபிவிருத்தி உதவியாளர்களை (Development Assistants) நியமனம் செய்துள்ளது.

நியமனம் பெற்றவர்களுக்கு எதிர்வரும் 18 முதல் 20 ஆம் திகதிவரை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் SLIDA 3 நாள் விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அபிவிருத்தி உதவியாளர்களாக நியமனம் பெற்றவர்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை கொழும்பு 7இல் உள்ள 'சிலிடா' நிறுவனத்துக்கு வரவேண்டும் என்று உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதிய பிரதான நிறைவேற்று அதிகாரி யு.எம்.ரணவீர கேட்டுள்ளார். (த-185)

## எழுச்சி மாநாட்டு ஏற்பாடு ஒருபுறம்; தேர்தல் ஆரவாரங்கள் மறுபுறம்

திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்த் தேசிய எழுச்சி மகாநாட்டினை வெகு சிறப்பாக நடத்துவதற்கான பரந்தஅளவிலான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான ஏற்பாட்டினை தமிழ் தேசிய எழுச்சி விழாக்குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.எதிர்வரும் 22ஆம் திகதி சனியன்று இடம்பெறவுள்ள இந்த விழா தொடர்பான பூர்வாங்க ஏற்பாட்டினை மேற்கொள்ளும் வகையில் தமிழ் தேசிய மகாநாட்டுக் குழுவினர் மாவட்டத்தின் பலவேறு கிராமங்களுக்கும் சென்று இது தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக திருகோணமலை உட்துறைமுக வீதியை அடுத்துள்ள ஆளுநர் பணிமனையின் முன்னாலுள்ள விளையாட்டு மைதானம்

அதனை அடுத்துள்ள இந்து கலாசார மண்டபம் என்பவற்றில் இது தொடர்பான விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த விழா இடம்பெறுவதற்கு ஒரு வார காலம் இருக்கும் நிலையில் திருகோணமலை மாவட்டமே விழாக்கோலம் பூணும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திருகோணமலை மாவட்டத்தின் இன்றைய நிலை தொடர்பாக சர்வதேசத்திற்கு எடுத்தியம்பும் விழாவாகவும் இதனைப் பயன்படுத்தப்போவதாகவும் விழாக் குழுவினர் தெரிவித்துள்ளனர்

இதற்கிடையே தேர்தல் திருவிழா தொடர்பான பிரசார வேலைகளை மேற்கொள்ளும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விகிரமசிங்க ஞாயிறன்று திருகோணமலைக்கான விஜயத்தினை மேற்கொண்டார். திருகோணமலை புதிய பேருந்து நிலையத்தில் அன்று காலை பிரசாரக்கூட்டம் இடம்பெற்றது. ஏற்கெனவே திருகோணமலை நகரில் மேற்கொள்ளப்பட்ட படையினரின் காவல் நடவடிக்கைகள் போதாதென்று எதிர்க்கட்சித் தலைவரின் வரவு தொடர்பாகவும் நகரில் பெருமளவிலான படையினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். நகரின் பிரதான

### திருமலை நிலைமை

பகுதிகளினூடாகப் பயணம் செய்வோர் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் இதே போன்று இவர்கள் பயணிக்கும் வாகனங்களும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் இந்தத் தேர்தல் தொடர்பாக அலட்டிக்கொள்ளாவிட்டாலும் கூட இங்கு வாழும் சிங்கள சமூகத்தினர் தேர்தலில் பெருநாட்டம் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். குறிப்பாக, இத்தகையோர் மத்தியில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவிற்கே பலத்த ஆதரவு காணப்படுகின்றது.

இதற்கிடையே கடந்த சில காலமாகவே ஆழிப்பேரலைக்ளின் தாக்கத்தினால் தமது வீடுகள் மற்றும் உடைமைகள் அனைத்தையுமே இழந்த நிலையில் நிர்க்கதியான நிலையில் உள்ள மக்களுக்கு நிலையான வீடுகளை அமைத்துக்கொடுக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன்வந்த போதும் உரிய காணிகளின்றி மக்கள் தவித்த நிலையில் தேர்தல் காலகட்டத்தில் திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடுகளை கடல் எல்லையிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் அமைக்கலாம் என்ற அரசின் அறிவிப்பு பாதிக்கப்பட்ட மக்களையும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும் பெரு மகிழ்ச்சி அடையவைத்துள்ளது. தேர்தல் திருவிழா ஆழிப்பேரலைகளின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பரிசாகவே இது அமைந்துள்ளது.

மற்றுமொரு விடயம் திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை டெங்கு நோய் பரவும் சாத்தியமுள்ள மாவட்டமாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் வெள்ளம் வருமுன்னரே அணை கட்டும் நிலையாக மாரி காலம் ஆரம்பமாவதற்கு முன்னரே

- திருமலையிலிருந்து சங்கீத் -

இந்த மாவட்டத்தில் டெங்கு நோயைத் தவிர்க்கும் வகையிலான திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் இது தொடர்பான சிறப்புக் கூட்டம் திருகோணமலை நகர மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது. பெருமளவிலான தொண்டர்களும் வெளிநாட்டு தன்னார்வத்தொண்டு நிறுவனங்களும் இந்தப் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முன்வந்துள்ளன.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற பின்வரும் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

| | பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1) | செல்வன் தி.யதுர்சன் | 161 |
| 2) | செல்வன் அ. குருநந்தன் | 142 |
| 3) | செல்வன் ர.ருக்ஸ்மன் | 125 |
| 4) | செல்வி கி.விபுனா | 126 |
| 5) | செல்வி பா.வைஸ்ணவி | 129 |
| 6) | செல்வி ல.எழிலரசி | 134 |
| 7) | செல்வி நா.நதியா | 134 |

(41622)(11-34)

பாடசாலைச் சமூகம்,
யாழ் / கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.


## தேர்தலில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வகுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 19

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புகளை அத்தாட்சிப்படுத்தும் அதிகாரிகளுக்கான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான கே. கணேஷ் தலைமையில் நடை பெறவுள்ள இந்த வகுப்பில் யாழ் மாவட்ட தேர்தல் தொகுதிக்குட்பட்ட தபால்மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு தேர்தல்கால கடமைகள் தொடர்பாகவும் அவற்றின் முக்கியத்துவங்கள் தொடர் பாகவும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(3-203-204)

## குடிதண்ணீர் தாங்கி அமைக்கக் காணி

வலிகாமம் தெற்கு, ஒக். 19

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் குடிதண்ணீர் தாங்கி அமைப்பதற்கு தேவையான காணியை மேற்படிபாடசாலையின் பழைய மாணவி ஒருவர் இலவசமாக வழங்கி உள்ளார்.

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் குடிதண்ணீர் தாங்கிக்குரிய நிலத்தை இப்பாடசாலையின் பழைய மாணவியும் பிரான்ஸில் வாழும் சுன்னாகம் வரியம் புலத்தை சேர்ந்த திருமதி நாகராசா நந்தினியும் அவரது தந்தையான எஸ். நடராசாவும் இணைந்து அன்பளிப்பாக வழங்கி உள்ளனர்.

(3-152)

## ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை

வலி. தென்மேற்கு, ஒக். 19

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும், பிரதேச விவசாய குழுக்கூட்டமும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலகமாநாட்டு மண்ட பத்தில் நடைபெறவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் திணைக்களங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் சம்மேளனங்களின் பிரதி நிதிகள் உட்பட பலர் கலந்துகொள்வர்.

(3-135)


## முதலாம் ஆண்டின் முடிவில்லா நினைவுகள்



மண்மகிழ 27 - 12 - 1970

கண்நெகிழ 19 - 10 - 2004

**பற்றிக் யோண்சன் பவஸ்ரினா**

ஆண்டொன்று ஆனதுவோ உங்களைப் பிரிந்து
ஆறவில்லை எம்மனம் ஈரவிழிகளுடன்
இல்லறத்தில் இணைந்த கணவரும் குஞ்சே நீர்
இன்பமுடன் ஈன்றெடுத்த இனிய புதல்வரும்
பெற்றெடுத்த அம்மாவும் அருமை அண்ணரும்
அனுதினமும் ஏங்கி கலங்கி நிற்க
மீண்டும் எம்மிடம் வந்து பிறப்பாயோ குஞ்சு!

பிரிவால் வாடிநிற்கும்
யோண்சன் (கணவர்), அருள்ராஜ் (மகன்),
அ. நாகேஸ்வரி (தாய்),
அ. தவசீலன் அண்ணன் (நோர்வே).

ஸ்ரேசனடி
சுன்னாகம்.

(41473)(11-19)



**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting
*Acc pac+Quick Books Pro+MYOB*
ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

Course Contents
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Badgeting
- Fore Casting
- Business Planing

இக்கற்கைநெறியின் முடிவில் 'வேலைகொள்வதற்கு
Audit Firm Experience தேவையில்லை!
Working Experience தேவையில்லை!

ஆரம்பம்
22/10/2005
23/10/2005 2.00pm

புதிய அறிமுகம் *Tally*






முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்

License No : 50445
BS No : 5412 1996
License No : KM41240

Access Graphics

சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



# ஐந்தாம் ஆண்டு நினைவு நாள்



இகம் : 1961❀06❀05

பரம் : 2000❀10❀19

**அமரர் மயில்வாகனம் நிமலராஜன்**

(ஊடகவியலாளர்)

பிள்ளைச் சிரிப்பும்
பிறை மதி போல் புன்னகையும்
வெள்ளை உடையும்
கையில் 'பைபிலு' மாய்
அள்ளிக் குவித்த செய்தி
அவனி முழுதும் பவனி வர
நீ இருந்தால் எமக்கு
நிழல் கிடைக்கும்
என்றிருந்தோம் ஆனால்
ஏமாற்றமே எம் வாழ்வில்.

குடும்பத்தினர்.
(கனடா).

## நெருக்கடிகளுடன் இயங்கும் முசலிப் மகாவித்தியாலயம்

ஒட்டுசுட்டான்,ஒக்.19

மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள முசலிப் மகாவித்தியாலயம் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வசதிகள் ஏதுமின்றி இயங்கிவருகின்றது.

1990ஆம் ஆண்டு ஆயிரத்து 200 மாணவர்களுடன் உயர்தரப் பாடசாலையாக இயங்கிவந்த இந்தப் பாடசாலை வசதிகளின்மையால் தற்போது 120 மாணவர்களுடன் இயங்கிவருகின்றது.

வகுப்பறை வசதிகள், தளபாட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் இங்கு மிகவும் குறைவாகவே இருக்கின்றன.

மீண்டும் இப்பாடசாலை புத்துயிர் பெற்று மாணவர்கள் போதிய வசதிகளுடன் கல்வி கற்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்கவேண்டும் என்று இப்பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் எதிர்பார்க்கின்றனர்.(த-341-203)

## ஆசிரியர் செயலமர்வு

வட்டக்கச்சி,ஒக்.19

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 'பல்தரக் கற்பித்தல்' தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகக் கல்விவள நிலையத்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் சம்பந்தப்பட்டவர்களைக் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கேட்டுள்ளார். (9-405)

## மூன்றாம் தவணைப் பரீட்சைக்கு ஏற்பாடு

வட்டக்கச்சி,ஒக்.19

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சைகளை வலயமட்டத்தில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை கல்வி அபிவிருத்திக்கும் தேர்வுக்குமான சபை மேற்கொண்டு வருகின்றது.

நவம்பர் மாதம் 2ஆம், 3ஆம் வாரங்களில் நடைபெறவுள்ள இப்பரீட்சைகளுக்கான பாடசாலை ரீதியான மாணவர் விவரங்களை விரைவாக அனுப்பிவைக்குமாறு மேற்படி சபையின் தலைவரும் வலயக் கல்விப் பணிப்பாளருமான த.குருகுலராஜா கேட்டுள்ளார்.

(9-405)

# வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு

கிளிநொச்சி அழகியல் கலாமன்ற பச்சிலைப்பள்ளிப் பிராந்திய நிலையத்திற்குக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஒரு தொகுதி வாத்தியக் கருவிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டக் கல்வி நிதியத்தில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான வாத்தியக் கருவிகள் இவ்வாறு அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இவற்றைச் சம்பிரதாய பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி அழகியல் கலாமன்ற பச்சிலைப்பள்ளி பிராந்திய நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வாத்தியக் கருவிகளைக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் அழகியல் கலாமன்ற ஆசிரியை பு.லூர்த்தகவியிடம் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார். (405)





(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

## சாரணர் சின்னம் சூட்டும் நிகழ்வு

வட்டக்கச்சி,ஒக்.19

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தின் சாரணர்களுக்குச் சின்னஞ் சூட்டும் நிகழ்வு கடந்த 6ஆம் திகதி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. சாரணர் பொறுப்பாசிரியர் இ.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினைப் பாடசாலை அதிபர் சி.சந்திரராஜா ஏற்றிவைத்தார். பாடசாலைக் கொடியினை ஆசிரியர் கிருபாகரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சாரணர் சத்தியப்பிரமாணம் எடுக்கும் நிகழ்வுடன் மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின. தலைமையுரையில் ஆசிரியர் இ.கிருபாகரன் சாரணர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற விடயங்கள் பற்றி விரிவாக எடுத்து விளக்கினார்.

தொடர்ந்து சாரணர்களுக்கான சின்னங்கள் சூட்டப்பட்டதுடன், அதற்கான துணிகளும் (ஸ்காவ்) அணிவிக்கப்பட்டன. இவற்றை அதிபர் சி.சந்திரராஜா ஆசிரியர்களான இ.கிருபாகரன், சு.சுதாஸ்கரன் ஆகியோர் அணிவித்தனர். (த-405)

## பருவமழை தொடங்கியிருப்பதால் மானாவாரி நெற்செய்கை ஆரம்பம்

பரந்தன்,ஒக்.19

கிளிநொச்சி மாவட்டத்தில் பரவலாகப் பருவமழை பெய்யத் தொடங்கியிருக்கிறது. இதனால் விவசாயிகள் மானாவாரி நெற்செய்கையை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இம்முறை பருவமழை பிந்தியதால் விவசாயிகள் மானாவாரி நெற்செய்கையை ஆரம்பிக்கமுடியாமல் இருந்தனர்.

எனினும், தற்போது மழை பெய்யத் தொடங்கியிருப்பதால் பூநகரி, கண்டாவளை மற்றும் பல பகுதிகளில் மானாவாரி நெற்செய்கையினை விவசாயிகள் ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஏனைய விவசாயிகளும் காலம்தாழ்த்தாது உடனடியாகப் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கவேண்டும் என்று விவசாயப் போதனாசிரியர்கள் கேட்டுள்ளனர். (த-352)




## விக்ரரின் நினைவுநாள் மன்னாரில் அனுஷ்டிப்பு

பரந்தன்,ஒக்.19

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப்.கேணல் விக்ரர், 2 ஆம் லெப். றோம் ஆகிய இரு மாவீரர்களின் 19 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் கடந்த புதன் கிழமை மன்னார் நெடுங்கண்டலில் உணர்வு பூர்வமாக நடைபெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரை அடம்பன் பங்குத்தந்தை ராஜநாயகம் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியைத் தளபதி சந்தியா ஏற்றிவைத்தார்.

தளபதி விக்ரரின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரை விக்ரரின் சகோதரி ஜெனிற்றாவும் 2ஆம் லெப்.றோமின் உருவப்படத்திற்கான ஈகச்சுடரை அவரின் பெற்றோர்களான செல்வராஜ் காளியம்மாவும் ஏற்றினர்.

நினைவுரைகளை மன்னார் மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் நி.நிலவரசி, அடம்பன் பிரதேச அரசியல்துறை நிர்வாகப் பொறுப்பாளர் றொபேட், அடம்பன் றோ.க. பாடசாலை அதிபர் தேவராஜ், தமிழீழ மாணவர் பேரவையின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் வேங்கையன், அடம்பன் தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த சந்தியோன் ஆகியோர் நிகழ்த்தினர்.(9-352-202)

## சைவநெறிப் போட்டிப் பரீட்சை

வட்டக்கச்சி,ஒக்.19

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தினால் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் தரம் 11இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சைவநெறிப் போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இப்பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் என திருநெறிக் கழகத்தினர் தெரிவித்தனர்.

ஆண்டு தோறும் நடத்தப்படும் இப்பரீட்சையில் திறமைச் சித்திகளைப் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (த-405)

## சிறுவர்தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள்

புதுகுடியிருப்பு ஒக்.19

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கரைதுறைப்பற்று கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன.

அந்தப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:-

**கவிதை**

தே.தேனுகா (முல்லைத்தீவு கலைமகள் வித்தி.), தி.பானுகா (முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை), யே.பிரியங்கா (முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை).

**கட்டுரை**

லோ.மேரி நிறோசனா (முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை), பே.சோபியா (வற்றாப்பளை ம.வி.), வி.யே.நிலோஜனி (முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை).

**மத்திய பிரிவு**

**கவிதை**

நி.ரவிக்கா (கலைமகள் வித்தி.), பெ.ஜீன்டிலக்சி (வற்றாப்பளை ம.வி.), ச.தனுஜா அம்பலவன் பொக்கனை ம.வி.).

**கட்டுரை**


பெ.டியான்சிலி (வற்றாப்பளை ம.வி.), தெ.தர்சிகா (கலைமகள் வித்தி.), மயூரிகா (அம்பலவன் பொக்கனை ம.வி.).

**மேற்பிரிவு கவிதை**

கு.கவி (வற்றாப்பளை ம.வி.), வி.விகல்யா (கலைமகள் வித்தி.), சி.சிவதர்சினி (வற்றாப்பளை ம.வி.).

**கட்டுரை**

இ.இந்துஷா (வற்றாப்பளை ம.வி.), அ.நிவேதினி (வற்றாப்பளை ம.வி.), சி.தட்சிகா (கலைமகள் வித்தி.). (த-353)



*பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முழங்காவில் இரணைமாதா நகர் மக்களுக்குக் காணி அனுமதிப் பத்திரங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. பூநகரிப் பிரதேச செயலர் மா.சிறிகாந்தகுமார் மக்களுக்குக் காணி அனுமதிப்பத்திரத்தை வழங்கி விளக்கவுரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.*

*(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

## கிளிநொச்சியில் உளநல விழா

வட்டக்கச்சி,ஒக்.19

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உளநலம் குன்றியவர்களுக்கான இல்லங்களை இணைத்து கடந்த 15 ஆம் திகதி கிளிநொச்சியில் உளநல விழா சிறப்புற நடத்தப்பட்டது.

கிளிநொச்சியில் உள்ள உளநலம் குன்றியவர்களைப் பராமரிக்கும் இல்லங்களான வெற்றிமனை, நிறைமதி இல்லம், சந்தோஷம் இல்லம், கருணா நிலையம், அன்புச்சோலை, மூதாளர் பேணலகம் ஆகியன இணைந்து இவ்விழாவினை முன்னெடுத்திருந்தன.

உளநலம் குன்றியவர்கள் சமூகத்திலிருந்து வேறுபட்டவர்கள் அல்லர் என்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்காகவும் இவ்விழா முன்னெடுக்கப்பட்டது.

இவ்விழாவின் கலை நிகழ்வுகள் காலை 9 மணிக்குக் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின. முன்னதாகப் பொதுச் சுடரினை அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தைச் சேர்ந்த மூன்று மாவீரர்களின் தந்தையாரான மாணிக்கம், எல்லைப்படை மாவீரரின் மனைவியான அருள்மேரி, அன்னை இல்ல உளநல ஆலோசகர் கலியுகவரதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினைத் தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். தொடர்ந்து ஐந்து இல்லங்களையும் சேர்ந்தவர்களிடையே விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

மாலை நிகழ்வுகள் பிற்பகல் 4மணிக்குக் கிளிநொச்சி கருணா நிலைய அரங்கில் ஆரம்பமாகின. கிளிநொச்சி மாவட்ட உளநல மருத்துவர் வைத்திய கலாநிதி பா.யூடி ரமேஸ் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மங்கல விளக்கினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் தயா சோமசுந்தரம், கிளிநொச்சி அன்னை இல்ல இயக்குநர் அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, கருணாநிலைய உளநலப் பிரிவுப் பொறுப்பாளர் எஸ்தர் அன்ரி, நிறைமதி இல்லத்தைச் சேர்ந்த வசந்தா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தலைமையுரையினைத் தொடர்ந்து உளநலம் பாதிக்கப்பட்டவர்களின் கலை நிகழ்வுகளும், உரைகளும் இடம்பெற்றன. சிறப்புரைகளைக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனப் பணிப்பாளர் திருமதி சுதர்சினி, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திருமதி நிசான்ரெய்லர், அன்னை இல்ல இயக்குநர் அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடப் பேராசிரியர் தயா சோமசுந்தரம் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் நிகழ்த்தினர். கலை நிகழ்வுகளாகப் பேச்சு, கவிதை, பாட்டு, நடனம், கிராமிய நடனம், வில்லுப்பாட்டு, நாடகம் உட்படப் பல நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வில் விளையாட்டுக்களில் வெற்றிபெற்ற வீரர்களும் உளநலம் குறைவானவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதில் துறைசார் பொறுப்பாளர்கள், அரச அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(9-405)

# பேலியகொடவில் ஒருவர் சுட்டுக்கொலை; பதிலுக்கு மற்றொருவர் அடித்துக் கொலை!

கொழும்பு, ஒக்.19

பேலியகொட, கிம்புட்டுவகொட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; துப்பக்கிச் சூட்டை நடத்தியவர் என்று கூறப்படும் நபர் பின்னர் கும்பல் ஒன்றால் அடித்துக் கொல்லப்பட்டார்.

களனிப் பிரதேசத்தைச் சேர்ந்த பாதாள உலக நபரான மாத்தையா என்ற நபரே அடித்துக் கொல்லப்பட்டவர் என்று அடையாளங் காணப்பட்டுள்ளார்.

அவர் கிம்புட்டுவஹிகொட பகுதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்று அங்கிருந்த ஒருவரைச் சுட்டுக்கொலை செய்தார் என்று கூறப்படுகிறது. அதன் பின்னர் அப்பிரதேசத்தில் நிகழ்ந்த மரண வீடொன்றிலிருந்து வந்த சிலர் மாத்தையாவை அடித்துக் கொன்றனர் என்று பொலீஸார் கூறுகின்றனர். இச்சம்பவம் குறித்து மேல்மாகாணத்தின் வடபகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் அசோக விஜயதிலக தெரிவிக்கையில்:-

இச்சம்பவங்கள் தொடர்பாக இரு சந்தேக நபர்கள் அப்பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதேவேளை மற்றொரு சந்தேகநபர் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து துப்பாக்கிகள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவும், ஏனைய சந்தேக நபர்களைக் கைதுசெய்யவும் என விசேட பொலீஸ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. - எனத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தின்போது காயமடைந்த மூவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (க)

# மேலும் 10ஆயிரம் தாதியர்கள் அடுத்த வருடத்தில் நியமனம்

## பிரதமர் மஹிந்த கூறுகிறார்

கொழும்பு, ஒக்.19

அரச வைத்தியசாலைகளுக்கு 15ஆயி ரம் தாதியர்களைச் சேர்த்துக்கொள்ளும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனமடுவ, கமுத்தாவ பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே பிரதமர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை ஐயாயிரம் தாதியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் பத்தாயிரம் தாதியர்களை அடுத்த ஆண்டில் சேவையில் இணைத்துக்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண் டில் அரச சேவை யில் காணப்படும் 33 ஆயிரம் வெற்றிடங் களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

மேலும் இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு தொழில் வாய்ப்புகளுக்குமான பயிற்சிகளை அளிப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு அவர்களை உரிய முறையில் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. - என்றார் பிரதமர். (க)


உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

புலமைப்பரிசில் பரீட்சையில் 147 புள்ளிகளைப் பெற்ற வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி

செல்வி சி.யதுசா

அவர்களை வாழ்த்துவதுடன் அவருக்கு உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

(41628)



சி.யதுசா

இல.72, ஜின்னாவீதி, யாழ்ப்பாணம்.

வே.குணதாசன், குடும்பத்தினர்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியை திருமதி **கமலாதேவி கந்தையா** அவர்கள் 07.10.2005 அன்று யாழ் பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற பட்டமளிப்பு விழாவில் முது கல்விமாணி(M.Ed.)பட்டம் பெற்றுக் கொண்டமையை மனமுவந்து பாராட்டி வாழ்த்து கின்றோம்.

திருமதி **கமலாதேவி கந்தையா**

(C/45673)(51-11-15)

கல்லூரிச்சமூகம்,
யா/ புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.


## அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழா

அகில இலங்கை 'சைவன்' நற்பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில் நாகசக்தி அறநெறிப் பாடசாலை ஆரம்பவிழாவும் க.பொ.த சாதாரணதரம் மற்றும் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் கடந்த 15ஆம் திகதி கரணவாய் தெற்கு செல்வாபுரத்தில் நடைபெற்றது.

இளங்கோ சனசமுக நிலையத் தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆரம்ப உரையை இந்து திணைக்கள உத்தியோகத்தர் ம.செந்தூரன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து செல்வாபுரத்தைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு உடுபுடைவைகளும், 88 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

ஜி.சீ.ஈ உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களும், ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்தரம் படிக்கத் தெரிவான மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் வடமராட்சிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.இராசையா, வடமராட்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் மற்றும் பாடசாலை அதிபர்கள், நிறுவன அதிகாரிகள் பொது மக்கள், கிராம சேவையாளர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-204)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

625/6, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

சின்னராஜா அன்ரன் விமல்ராஜ்
[B.B.A (FM.Spl.)]



யாழ்.பல்கலைக்கழகத்தில் 07.10.2005 இல் நடைபெற்ற 24ஆவது பட்டமளிப்பு விழாவில் தொழில் நிர்வாகமாணி பட்டம் பெற்ற இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

(21.15.34) (41623)

விக்ரோ குடும்பத்தினர் .
(கனடா)



அன்புள்ள தொழிலதிபர்களே,

நாட்டின் வியாபாரத் துறையை உலகதரத்திற்கு புதிய முறையில் முன்னேற்றுவதற்காக, முதலாவது தொழிலதிபராக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகிறேன்.

சின்னம் கோப்பை

விக்டர் ஹெட்டிகொட
சித்தாலேப வைத்தியர்.

www.victor hettigoda.com
www.lankaenews.com
www.presidentialpoll2005.com

S.V.H.


## வலி.கிழக்குப் பிரிவில் சமுர்த்தி முத்திரை

வலிகிழக்குப் பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி முத்திரை பெறத் தகுதியான பயனாளிகளுக்கு முத்திரைகள் அடுத்த வாரம் முதல் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, முத்திரைவிநியோகம் தொடர்பான பொதுமக்களின் மேன் முறையீட்டுக் கடிதங்களும் மேன்முறையீட்டுக்குழுக்களால் துரிதமாக விசாரிக்கப்பட்டு வருகின்றன. இதில் தகுதியான பயனாளிகளுக்கும் முத்திரை வழங்கப்படவுள்ளதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (த-178)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

07.10.2005 இல்
யா/பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற
24 ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணி (M.Ed.)
பட்டம்பெற்ற எமது அதிபர்
திருவாளர்

சிதம்பரப்பிள்ளை
மாணிக்கராசா



அவர்கள் வெங்கடேஸ்வரப் பெருமாள் திருவருளால் பல பட்டங்கள் பெற்று கல்விச் சேவையில் சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்

(41620)
(21.15.34)

பழைய மாணவர்கள்
(யா/சன்மார்க்க ம.வி.)



MBBS / MD

BECOME A DOCTOR

Medical Degree (Doctor of Medicine MD) offered by



CRIMEA MEDICAL INSTITUTE
(CRIMEA STATE MEDICAL UNIVERSITY)

East EUROPE (Ukraine)

Recognized by the SRI LANKAN MEDICAL COUNCIL

M.B.B.S Degree Program (6 years)
Eligibility : G.C.E A/L passes in Biology Physics and Chemistry

Premedical Program + MBBS (7 years)
Eligibility : G.C.E O/L passes in All subjects
including English, Maths and Science

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால், UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அயல்நாடுகளாகிய Poland Romania, Austria, Italy, France, Spain, Germany, U.K, ஆகியநாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.

யாழ்ப்பாணத்தில்.......

22ஆம் திகதி(சனிக்கிழமை) & 23ஆம் திகதி (ஞாயிற்று கிழமை) எமது காரியாலய பிரதிநிதிகளை சந்தித்து சகல விபரங்களைப்பெற்றுக்கொள்வதுடன் விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கலாம்

இடம் : COSY Restaurant, 15 Sirampiadi Lane, (Stanley Road) Jaffna.
நேரம் : 22ம் திகதி சனிக்கிழமை~மாலை 3.30 pm - 6.30 pm
23ம் திகதி ஞாயிற்றுகிழமை~காலை 9.30 am ~ 1.30 pm

Authorized Agents for Asian Region:
M/s. MAJU INDRA SDN BHD, Kuala Lumpur Malaysia.

Admissions Co-ordinated in Sri Lanka by
Scholars Information Center,
2nd Floor, 'Colombo Plaza', 50, Galle Road, Wellawatta, Colombo - 06.
e-mail : peter@scholars-info.com Tel: 0777-767818

ஐரோப்பிய நாடொன்றிற்கு சட்டபூர்வமாக செல்வதற்கு அரியவாய்ப்பு



திருமண வாழ்வில் பொன்விழா

19.10.2005



திருமண பந்தத்தின் அகவை
ஐ பத்து ஆண்டுகளைக் கடந்து
ஆண்டவன் தோட்டத்திலே
பூத்துக் குலுங்கி பொன்விழா
காணும் தாங்கள் இருவரும்
இன்றுபோல் என்றும் வாழ
எம் அனைவரினதும் இனிய
நல்வாழ்த்துக்கள்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

திரு.திருமதி
மகாலிங்கம்
எமலின்

'அன்னவாசம்'
குருக மதவடி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை .

(41386) (32-11-17)

# தமிழ்ப்பெண்கள் அனைவரும் விடுதலைக்காக விழிப்படைய வேண்டியது மிகவும் அவசியம்

**தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரரான 2ஆம் லெப். மாலதியின் 18ஆம் ஆண்டு நினைவுதினத்தின் பிரதான நிகழ்வு கடந்த 10ஆம் திகதி மன்னார் ஆட்காட்டிவெளி பாடசாலையில் நடைபெற்றது.**

**அந்த நிகழ்வில் தமிழீழ அரசியல் துறையின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி சிறப்புரை ஆற்றினார். அவரது உரையின் தொகுப்பு இது.**

எங்களுடைய தமிழீழ மண்ணில் முதல் பெண் மாவீரராக 2ஆம் லெப்ரினன்ட் மாலதி வீரச்சாவடைந்த அந்தக் காலகட்டத்தில் எங்களுடைய சமூகத்தில் பெண்களுடைய நிலைப்பாடு பின்தங்கியே இருந்தது.

ஏற்கனவே எங்களுடைய தமிழ்ச்சமூகத்தில் பல பிற்போக்கு கருத்துக்கள் நிறைந்துள்ளது, சமூகத்தில் இணைபிரியாத அங்கமாகப் பெண்கள் இருந்தாலும் இவர்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற ஒரு வரையறைக்குள் பெண்களின் வாழ்க்கையை வகுத்துக் கொண்ட சமூகமாகத்தான் எங்களுடைய தமிழ்ச்சமூகம் இருந்தது.

அந்தநேரத்தில் ஒட்டு மொத்தமான தமிழ்த்தேசிய இனம் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களுடைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு உள்ளானது.

தமிழ்மக்கள் அனைவருமே பாதிக்கப்பட்டார்கள்; துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் மிகவும் துன்பகரமான சூழலில் இடம்பெயர்ந்து ஏதிலிகளானார்கள். சிங்களப் பேரினவாத காடையர்களால் படுகொலை செய்யப்பட்டார்கள்.

தமிழ்ப்பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். தமிழர் என்ற காரணத்தினால் எங்களுடைய மக்கள் இன்னோரன்ன அவலங்களைச் சந்தித்தனர்.

அப்பொழுதுதான் அகிம்சைப் போராட்டம் எங்களுடைய விடுதலையை பெற்றுத் தராது. ஆயுதம் மூலமாகத்தான் பெற்றுக் கொள்ளமுடியும் என்ற நம்பிக்கை எமது மக்களுக்கு ஏற்பட்டது.

**பெண்களின் ஆற்றலுக்கும் களம் அமைத்த தலைவர்!**

அப்போது தமிழ்ப் பெண்களும் இந்த தேசத்தின் விடுதலைக்காக போராட வேண்டும். நம் தேசம் விடுதலை அடையும் போதுதான் அந்த தமிழ்த் தேசத்திலே வாழுகின்ற பெண்களும் தங்களுடைய சமூக விடுதலையைப் பெற்றுக்கொள்ளமுடியும் - தங்களுடைய வரையறுக்கப்பட்ட வாழ்வில் இருந்து மீட்சிஅடைய முடியும். தங்களுடைய மனித ஆளுமையை விருத்தி செய்து கொள்ள முடியும் - தங்களுடைய அறிவை, ஆற்றலை, ஆளுமையை குடும்பம் என்ற வட்டத்துக்குள் மட்டும் மட்டுப்படுத்தி விடாமல் சமூகத்துக்குப் பயன்படுத்த முடியும் - தேசத்தினுடைய அபிவிருத்திக்கு பயன்படுத்தமுடியும் - பெண்களுக்குள்ளே இருக்கின்ற மனித ஆளுமை தேசத்தின் அபிவிருத்தியில் - தேசத்தின் வளர்ச்சியில் சம பங்

## சமூக மனநிலையில் மாற்றம் வேண்டும் என்கிறார் தமிழினி

கெடுக்கமுடியும் என்பதை எங்களுடைய தேசியத் தலைவர் அவர்கள் மிக ஆழமாகப் புரிந்து கொண்டதன் அடிப்படையில் இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் இணைந்து போராட்டத்துக்கான பாதை திறக்கப்பட்டது.

**தொகுப்பு: ச.உ தயாசங்கர் (வெள்ளாங்குளம் செய்தியாளர்)**

பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொள்ளத் தொடங்கிய ஆரம்ப கால கட்டம் இன்று போல் இருக்கவில்லை பல நெருக்கடியான காலகட்டம்.

பெண்களின் ஆற்றலின் நம்பிக்கை முற்று முழுதாகவே இல்லாத ஒரு சூழ்நிலை. அந்தச் சூழலில் தான் எங்களுடைய முதலாவது பெண்கள் அணி பயிற்சிக்காக செல்கின்றது. அந்த முதலாவது அணியில் இந்த அடம்பன் பிரதேத்தில் இந்த ஆட்காட்டிவெளிக் கிராமத்தில் இருந்து மாலதி தன்னையும் ஒரு போராளியாக இணைத்துக்கொண்டாள்.

**அக்கினிக் குழந்தைகள்**

எங்களுடைய விடுதலைப் போராட்டம் இதுவரை சந்தித்த வேதனைகள் அதன்மூலம் அடைந்த சாதனைகள் அளப்பரியது. எங்களுடைய விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் வளர்ச்சியும் அளப்பரியது.

விடுதலைப் புலிகள் மகளிர்படையணிகள் வளர்ச்சியைப்பற்றி எங்களுடைய தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிடும் பொழுது, விடுதலைப் புலிகள் மகளிர் படையணிகளின் தோற்றமும் வளர்ச்சியும் எமது இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடுதலைப் புலிகள் இயக்கம் பிரசவித்த அக்கினிக் குழந்தையாகவே விடுதலைப் புலிகள் மகளிர் படையணிகள் இன்று இருக்கின்றன.

தேசிய தலைவர் அவர்களின் தூர நோக்கு கொண்ட நேரிய வழிகாட்டல் சாதாரணமாக வீடுகளுக்கு உள்ளே முடங்கிக் கொண்டு இருந்த பெண்களை இந்த தேசத்தின் வீரம் மிகுந்த பெண்களாக - இந்த தேசத்தின் வரலாற்றை மாற்றும் எமது வல்லமை மிக்க பெண்களாக - மாற்றி அமைத்து இருக்கின்றது.

**அனைத்துப் பெண்களும் விழிப்படைய வேண்டும்!**

நாங்கள் முதலில் எங்களுக்குள் இருக்கின்ற இருட்டை விலக்கி விழிப்படைய வேண்டியதேவை இருக்கின்றது. இன்று ஒரு புறத்தில் எங்களுடைய பெண்கள் ஆளுமை மிக்க சாதனைகளைச் செய்துகொண்டு இருக்கின்றார்கள். அதனுடைய அதிர்வுகள் சமூகத்திலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

சமூகத்திலே வாழுகின்ற பெண்கள் சராசரியாக மன உணர்வுகளுக்கு அப்பால் பல சாதனைகளை செய்வதற்கு இன்று தயாராகி உள்ளார்கள். இது ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம்தான். ஆனால், எல்லாப் பெண்களுமே அந்த மாற்றத்துக்கு உள்ளாகிவிட்டார்கள் என்றும் கருதமுடியாது.

இன்றும் தங்களில் நம்பிக்கை இல்லாமல் அழுதுவடித்துக் கொண்டு எந்தப் பிரச்சினைகளையும் எதிர்கொள்ளும் ஆளுமை அற்று வீட்டிலே முடங்கிக் கிடக்கின்ற பெண்களையும் நாங்கள் பார்க்கின்றோம்.

இன்றும் கூட பெண்களிலே நம்பிக்கை இல்லாமல் பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கணிக்கின்ற - பெண்கள் என்றால் - ஏளனமாக நோக்குகின்ற மனிதர்களையும் நாங்கள் நாளாந்தம் வாழ்க்கையில் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.



கழுத்திலே நஞ்சைக் கட்டிக்கொண்டு பெண்கள் களத்திலே நிற்கின்ற இந்தக் காலத்திலும் - தங்கள் உடம்போடு வெடிமருந்தைக் கட்டிக்கொண்டு போய் கரும்புலிகளாக வெடித்துச் சாதனை படைகின்ற இந்தக் கால கட்டத்திலும் கூட பெண்களை அதாவது, தன்னுடைய தாயை - தன்னுடைய சகோதரியை - தன்னுடைய வாழ்க்கைத் துணைவியை - தன்னைவிட குறைந்த நிலையில் வைத்துப் பார்க்கின்ற மனோநிலை கொண்ட மனிதர்களையும் நாங்கள் பார்க்கின்றோம்.

ஆகவே, சமூகத்தினுடைய மன உணர்வில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஒவ்வொருவரும் இன்னொருவரை மதிப்பதற்குத் தயாராக இருக்கவேண்டும். ஆளுமைகளை மதிக்க வேண்டும்; உறவினை வளர்க்க வேண்டும். அந்தப் பரஸ்பர நல்லுறவுதான் எங்களுடைய தமிழீழத்தில் உண்மையான பெண்விடுதலையைச் சாத்தியமாக்கும்.

(வளரும்)

---

# அரச வைத்தியசாலைகளில் பணியாற்றும் தற்காலிகத் தொழிலாளருக்கு நியமனம்!

## சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு,ஒக்.19

அரசாங்க வைத்தியசாலைகளில் பதில் மற்றும் தற்காலிக அடிப்படையில் சேவையாற்றும் தொழிலாளர் தர ஊழியர்கள் மூவாயிரம் பேருக்கு சுகாதார அமைச்சு நிரந்தர நியமனம் வழங்கவுள்ளது.

இவ்வாறு சுகாதார போஷாக்கு மற்றும் ஊவா வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

தற்போது அரச வைத்தியசாலைகளில் நிலவும் வெற்றிடங்களை பூர்த்திசெய்யும் வகையிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக 2001ஆம் ஆண்டில் அரச வைத்தியசாலைகளில் தற்காலிக, மற்றும் பதில் தொழிலாளர்களாக நியமிக்கப்பட்ட 212 பேருக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரு கிறது என்றார் (த-205)

# தேர்தல் கடமைகளில் 81 ஆயிரம் பொலீஸார்

கொழும்பு,ஒக்,19

ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் பாதுகாப்புக் கடமையில் 81 ஆயிரம் பொலீஸாரும் ஊர்காவல் படையினரும் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இந்தத் தகவலை தேர்தல் செயலகத்தின் பிரதி பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் அமைக்கப்படும் கொத்தணி வாக்குச் சாவடிகளில் இராணுவத்தினரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேவை ஏற்படும் பட்சத்தில் ஏனைய பிரதேசங்களுக்கு முப்படைகளையும் கடமையில் ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (த-ரி)

# மாகாணசபைக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ்.மாவட்ட செயலகத்தில் தலைமைப் பீட உதவி அரச அதிபராகக் கடமையாற்றிய வே.வீரபத்திரபிள்ளை இலங்கை நிர்வாக சேவையில் பதவியுயர்வுடன் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (த-202-204)

# குடாநாட்டில் மீண்டும் பாதீனியம்

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். மாவட்டத்தில் 5 பிரதான இடங்களில் பாதீனியங்கள் மீண்டும் முளைத்துள்ளன.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட யார்க்கருப் பகுதி, வலி வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட கீரிமலைப் பகுதி, வலி.கிழக்குப் பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர், உரும்பிராய், கோப்பாய் பகுதிகள், வலி. தெற்குப் பிரதேச சபைக்குட்பட்ட மருதனார்மடப் பகுதி, வலி. மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட தொல்புரம் பகுதியிலும் பாதீனியம் மீண்டும் பரவிமுளைத்திருக்கின்றன.

சூழல் பாதுகாப்பு முன்னோடித் தினங்களில் இந்தப் பாதீனியங்கள் அழிக்கப்படும் எனக் கூறப்பட்டபோதிலும் இதுவரை இவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (த-185)

# தேர்தல் கண்காணிப்புப் பணியில் மூன்று அமைப்புகள் ஈடுபடும்

யாழ்ப்பாணம்,ஒக்.19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணியில் இலங்கை முழுவதும் மூன்று அமைப்புகள் ஈடுபடவுள்ளன.

இந்தத் தகவலைத் தேர்தல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் பி.குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'பவ்ரல்', தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்(CMEV), உள்ளூர் அமைப்பான 'டிறிய பௌன்டேஷன்' ஆகிய 3 அமைப்புகளும் இலங்கை முழுவதும் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளன.

பவ்ரல், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் ஆகிய இரண்டும் வாக்களிப்பு நிலையங்களைக் கண்காணிப்பதற்கு தேர்தல் திணைக்களம் அனுமதி வழங்கியிருக்கிறது.

'டிறிய பௌன்டேஷன்' அமைப்பு மக்களிடையே தேர்தல் தொடர்பான பணிகளில் ஈடுபட்டிருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

(த-202-204)

# கிளிநொச்சியிலும் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

கிளிநொச்சி,ஒக்,19

யாழ்ப்பாணத்தில் இரண்டு பிரபல பாடசாலைகளின் அதிபர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்கள் மேற்கொண்டு வரும் பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நேற்றுமுன்தினம் முற்பகல் ஒரு மணி நேரம் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று 18ஆம் திகதிவரை குடாநாட்டு மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமை தெரிந்ததே.

இவர்களது பகிஷ்கரிப்பிற்கு வலுச் சேர்க்கும் வகையிலேயே கிளிநொச்சி மாணவர்கள் நேற்று இந்த வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-305-203)

ஒக்டோபர் - வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
வாசிப்புப் பழக்கம்: வளர்ச்சி, தடைக்கல், எமது கல்விமுறைமை...
வாசியுங்கள்!
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### காணி விற்பனைக்கு

யாழ்.நகரில் மானிப்பாய் வீதியில் K.K.S. வீதிச் சந்திக்கு அருகில் 2 பரப்பு காணியும் 4200 சதுர அடி விஸ்தீரணமுள்ள கட்டடமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: குமார் அல்லது கலா T.P. 011 2597183, 0115364293. (சி-45692)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், கனடாவில் P.R. உடைய, 1973ஆம் ஆண்டு, மிருகசீரிடம் 22பாவம், 12 செவ்வாய் உடைய மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. ஜாதகம், படத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2718. மே/பா உதயன். (41603)

### அமெரிக்க விசா

55050 அமெரிக்க விசா லொத்தர் Lateat விண்ணப்ப விவரங்களை இலவசமாகப் பெற சரியான விலாசத்துடன் தொடர்பு கொள்க. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய வாய்ப்பு Penquin Book Shop B2/F23, Bloementhal Flats, Colombo 13. T.P 0773081764, 2438367 Internet மூலம் அமெரிக்காவிற்கு அனுப்பி Receipt அனுப்பப்படும். (சி-45557)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Original Prima Broiler குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தன பாலசிங்கம், நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41639)

### வாடகைக்கு

திருநெல்வேலியில் 2 அறைகளுடன் சகல வசதியுடன் கூடிய வீடு பகுதியாக உடன் வாடகைக்குண்டு. 3 அல்லது 4 பேர் கொண்ட குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்பு: 021-222 2608 (மாலை 6 மணிக்கு முன்) (41635)

### விலைக்குத் தேவை

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, நல்லூர் ஆகிய பகுதிகளில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு ஒன்று விலைக்குத் தேவை. தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ளவும். இ.கந்தையா, 625/9A ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (41608)

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை மாணவி

செல்வி

**சிவசுப்பிரமணியம் சகிலா**

அவர்கள் 2005 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் 23 ஆவது நிலையில் உள்ளார் இவரைப் பாராட்டி பல்கலையும் கற்று மென்மேலும் உயர வாழ்த்துவதுடன் அவருக்கு ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மம்மா, ஆசைமாமா குடும்பம்.

து.பிறேமச்சந்திரன்
கமலா ஸ்ரோஸ்,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (41646)(26-21-11-34)

---

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
### தரம் - 6 மாணவர் அனுமதி - 2006

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் தரம் - 6 வகுப்பு மாணவர் அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவு திகதி - 2005.11.03**

- அதிபர் -
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(C/45804)(21.53.11.17)

---

## தேவை

தொலைத்தொடர்பு நிலையத்திற்கு ஆள்தேவை
* போக்குவரத்துச் செலவு தரப்படும்.

தொடர்பு: **கணேஸ் கொமினிகேசன்**
மானிப்பாய் வீதி,
கோப்பாய்.
T.P.: 021 4590881.

(41652)
(26-11-34-21

---

வீதிகளுக்கு மின்சாரம்

வரணிப்பகுதியில் 'நிக்கொட்' திட்டத்தின் உதவியுடன் கரம்பைக்குறுச்சி பிரிவில் வேலாயுதர் கோயில் வீதி, அம்மாகடை வீதி, வரணி இயற்றாலை பிரிவில் கலைவாணி சனசமூக நிலைய வீதி மற்றும் காட்டுக் கந்தசாமி கோயில் வீதி ஆகிய வற்றிற்கு மின்சாரம் வழங்கப்பட உள்ளது (த-170)

---

## புதுக்கடைத் திறப்புவிழா

19.10.2005 புதன்கிழமை முற்பகல் 10-11மணி வரையுள்ள சுபவேளையில்

**பாலவிநாயகர் அன்**
**வீடியோ விஷன் பான்சி ஸ்பொட்**

என்னும் ஸ்தபானம் திறந்து வைக்கப்படவுள்ளது. இங்கு தொலைத்தொடர்பு ,VCD, CD, வாடகைக்கும் விற்பனைக்கும். புதிய பழைய பக்தி பாடல்கள் சினிமாப் பாடல்கள், அழகுசாதனப் பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
நாடவேண்டிய இடம்:

பாலவிநாயகர் கொமினிகேஷன்
அன் வீடியோ விஷன்,
பான்சி ஸ்பொட்.
152,பலாலி றோட்,
யாழ்ப்பாணம்.

(41640)(42.11.21.17)

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17 - 11 - 1948
உதிர்வு 19 - 10 - 2002

'கலைஞானகேசரி', மூத்த அண்ணாவியார்

## தூசைப்பிள்ளை றோக்

(மணற்காடு, குடத்தனை)

தந்தைக்கு என் செய்வோம்
தங்கள் சிரிப்புக்கு எங்கு செல்வோம்
தனிமைக்கு துணையறியோம்
தயங்கும் இதயத்திற்கேது சொல்வோம்
தாயும் நாங்களும் கண்ணீர் சொரிகின்றோம்.

தற்காலிக முகவரி:-
மருதங்கேணி வீதி,
புலோலி கிழக்கு, புலோலி.
(41645)(21.11.34)

இவர் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

---

# மரண அறிவித்தல்

## செல்வி அர்ச்சனா பாலசுப்பிரமணியம்

**(யாழ். கன்னியர்மடம் பழைய மாணவி)**



கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அர்ச்சனா பாலசுப்பிரமணியம் அவர்கள் 17-10-2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - லலிதாம்பிகை (சரோஜா தேவி) தம்பதியரின் அன்பு மகளும் உமாரமணன் (டென்மார்க்), அருண் பிரசாந் (யாழ். மத்திய கல்லூரி), தாட்ஷாயினி (இந்து மகளிர் கல்லூரி), ருஜிகேசன் (த.க. பாடசாலை, கல்வியங்காடு) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யோகராசா (சந்திரன் - சைலோ வாட்ச் வேக்ஸ், யாழ்.) காந்தராசா (இந்திரன் - டென்மார்க்), ரஜனி, தீபா (டென் மார்க்), சுரேந்திரன், மு.பாக்கியநாதன், செ.பேரின்பராசா, மா.துரைராஜா, தவமலர், பரம்சோதி (தனம்), பவானி ஆகியோரின் பாசமிகு மருமகளும் இந்திரராசா, புஸ்பராசா, தெய்வேந்திரம், சரஸ்வதி, சரோசாதேவி, ஜெயா, லீலா (டென்மார்க்), கமலாம்பிகை (கலா - கொழும்பு), சந்திரலேகா (பவா - கொலண்ட்), தனபாலசிங்கம் (டென்மார்க்), சிவராசா (செல்வம் -கொழும்பு), விஜயரட்ணம் (கொலண்ட்), சுரேந்தினி (பிரான்ஸ்), சுயேந்தினி, நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் காலஞ்சென்றவர் களான அரிய குட்டி - பாக்கியம், பழனிவேல் - மாரிமுத்து, சிவராசா (சைலே வோட்ச்), ஸ்ரீகுணம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.10.2005) புதன்கிழமை கட்டப்பிராயில் உள்ள அவரது சொந்த இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் ஒரு மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்கு வீதி,
கட்டப்பிராய்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(41642) (24)

---


Jayoda **ஜயோதா**

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6329347 முதல் 6338053 வரை சீட்டிழுப்பு இல. 177 திகதி 17-10-2005

வெற்றி எண்கள் **8 8 3 8 6 8** சுப்பர் எண் **01**

**சுப்பர் ஜக்பொட் பரிசு 1,02,49,525/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மூழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,02,49,525/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 50,000/- | 3,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 73 | 5,000/- | 3,65,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 755 | . 500/- | 3,77,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 7,545 | 50/- | 3,77,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 74,749 | 10/- | 7,47,490/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 07 | 5,000/- | 35,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 77 | 1,000/- | 77,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 756 | 100/- | 75,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 7,471 | 20/- | 1,49,420/- |
| | | மொத்தம் | 35,54,260/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 41,56,860/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,04,59,250/-**

தொடர் இல. 7265960 க்கு மேற்பட்ட செல்லுபடியான டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 20 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 31, செயின்ட் மைக்கல்ஸ் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கேகாலை | 6334686-1-86 |
| கம்பஹா | 6331918-4-47 |
| கொழும்பு | 6335382-5-81 |
| ஹம்பாந்தோட்டை | 6331305-6-49 |
| கண்டி | 6329861-3-28 |
| பொலன்னறுவை | 6330741-6-56 |
| மாத்தறை | 6335754-7-33 |
| நுவரெலியா | 6329374-4-91 |

# 'சுப்பர்' தொடரின் எதிர்காலம் கேள்விக் குறி!

சிட்டி,ஒக்.19

சர்வதேச கிரிக்கெட்சபை (ஐ.சி.சி) ஆரம்பித்துள்ள சுப்பர் கிரிக்கெட் தொடர் எதிர்காலத்தில் தொடருமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

உலக சம்பியனாக பெரும்பாலானோரால் ஏற்றுக் கொள்ளப்படும் அணி, உலகில் உள்ள சிறந்த வீரர்களுடன் தங்களது திறமையைப் பரீட்சித்துப் பார்த்துக் கொள்வதற்காக எழுந்த சிந்தனைதான் இந்த சுப்பர் தொடர் போட்டி,

அதற்கான முதல் முயற்சி ஆஸ்திரேலியாவில் முடிவடைந்துள்ளது. அதில், ஒரு தினத் தொடர் மட்டுமல்லாது, டெஸ்ட் போட்டியிலும் உலக சம்பியன் ஆஸ்திரேலியாவே அபாரமான வெற்றி பெற்றுள்ளது.

பல்வேறு நாடுகளில் இருந்து திரட்டப்பட்ட வீரர்களை உள்ளடக்கிய உலக லெவன் அணியால் தனி ஒரு நாடான ஆஸ்திரேலியாவுக்குப் போட்டியளிக்க முடியவில்லை.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட டெஸ்ட் போட்டி, 4 நாள்களுக்குள்ளேயே முடிந்திருக்கிறது.

சுப்பர் டெஸ்ட் தொடர் தங்க முட்டை போடும் தொடராக இருக்கும் என எதிர்பார்த்து தொடங்கியது ஐ.சி.சி. ஆனால் உலக லெவன் அணிகளின் படுதோல்விகளால் இத்தொடரின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

உலக லெவன் அணி அடைந்த ஏமாற்றம் குறித்து ஐ.சி.சியின் முதன்மைச் செயல் அதிகாரி மல்கம் ஸ்பீட் சுப்பர் டெஸ்ட்போட்டி சிட்னியில் நேற்றுமுன்தினம் முடிவடைந்ததும் கூறியதாவது:-

சுப்பர் கிரிக்கெட் தொடரை நடத்தவேண்டும் என நாங்கள் சிந்தித்தபோது சம்பியன்களைக் கொண்டு திரட்டப்படும் அணியை சம்பியன் நாடு(ஆஸ்திரேலியா) எப்படி வெல்லமுடியும் என்று கேட்டுக்கொண்டோம்.

ஆனால், மெல்போர்ண் மற்றும் சிட்னி ஆகிய இடங்களில் நடைபெற்ற 2 போட்டிகளிலும் எதிர்பார்ப்புக்கு மாறான முடிவே கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் இது மாதிரி தொடர் நடைபெறுமா எனக் கேட்டால் சாதாரணமாக தெரியாது என்ற பதில்தான் வரும்.

உலகில் உள்ள முன்னிலை வீரர்களுடன் திறமையைச் சோதித்துப் பார்த்துக்கொள்வதற்கு உலக சம்பியனாகக் கருதப்படும் அணிக்குக் கிடைத்த வாய்ப்பாகவே சுப்பர் டெஸ்ட் தொடரைக் கருதுகிறோம்.

அடுத்த உலக சம்பியனாக இங்கிலாந்தோ, இந்தியாவோ தென் ஆபிரிக்காவோ அல்லது ஆஸ்திரேலியாவோ இருக்கலாம். ஆனால், சுப்பர் தொடர் ஐ.சி.சியின் போட்டி நிகழ்வுகளில் வழக்கமான ஒன்றல்ல. குறிப்பிட்ட கால இடைவெளியில் நடத்துவது மாதிரியான தொடரும் கிடையாது எங்களை அடித்துக் கொள்ள யாரும் இல்லை என மார்தட்டிக் கொள்ளும் உலக சம்பியன் அணியுடன் உலகில் உள்ள சிறந்த வீரர்கள் ஒருங்கிணைந்து விளையாடுவதற்குக் கிடைத்த வாய்ப்புதான் இது.

மொத்தத்தில் ஐ.சி.சிக்கு வருமானம் ஈட்டித் தரும் தொடர் இது. அதனால் உறுப்பு நாடுகளும் ஏதாவது ஒரு வகையில் நிச்சயம் பயனடைகின்றன என்றார் ஸ்பீட். (ஒ)

# சானியாவைப் புகழ்கிறது லண்டன் பத்திரிகை



லண்டன்,ஒக்.19

'உலகையே மாற்றக் கூடிய வல்லமை படைத்த 10 பேரில் இந்தியாவின் சானியா மிர்சா ஒருவர்' என லண்டனிலிருந்து வெளியாகும் 'நியூ ஸ்டேட்ஸ்மன்' வார இதழ் புகழாரம் சூட்டியுள்ளது.

18 வயதாகும் இந்திய டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா, அமெரிக்காவிலிருந்து வெளியாகும் டைம் பத்திரிகையின் அட்டையில் சமீபத்தில் இடம்பிடித்து, ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தார்.

தற்போது நியூ ஸ்டேட்ஸ்மன் வார இதழ் அவருக்கு மேலும் கௌரவம் அளிக்கும் விதமாக செய்தி வெளியிட்டுள்ளது.

சானியா மிர்சா திறமை குறித்து ஜேசன் கவுர் என்பவர் அப்புத்தகத்தில் எழுதியுள்ள கட்டுரையில் கூறியுள்ளதாவது

முஸ்லிம் இனத்தை சேர்ந்த 18வயது இந்திய டெனிஸ் வீராங்கனை ஒருவர், உலகை மாற்றக்கூடிய திறமையைக் கொண்டுள்ளார் என்றால் நம்புவது கடினமாக உள்ளது. அதே போல, 100 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில், குறிப்பாக பெண்கள் அதிகமாக உள்ள ஒரு நாட்டிலிருந்து முதன்முதலாக உலக டெனிஸ் தர வரிசையில் 37ஆவது இடத்தைப் பெற்றுள்ளதை மிகைப்படுத்திப் பார்பதும் கடினமாக உள்ளது.

ஒழுக்கம், நெஞ்சுறுதி, கவர்ச்சித் தன்மை ஆகிய அனைத்துக்கும் மேலாக டென்னிஸ் உலகில் சாதிக்கவேண்டும் என்ற வைராக்கியத்தை சானியா கொண்டுள்ளார்.

விளையாட்டில் பெண்கள் ஈடுபடுவதற்கு அதிகம் ஊக்கம் அளிக்காத நாட்டில், டென்னிஸ் உலகில் முதல் 40 இடத்துக்குள் வந்த முதல் இந்திய வீராங்கனை சானியா மிர்சா என அக்கட்டுரையில் கவுர் குறிப்பிட்டுள்ளார். (ஒ)




# யாழ். இந்துவை 91 ஓட்டங்களால் பம்பலப்பிட்டி இந்து வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.19

யாழ். இந்துக் கல்லூரிக்கும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்குமிடையே 22 வருடங்களுக்குப் பின்னர் கொழும்பில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணி 91 ஓட்டங்களால் வென்று வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கிக்கொண்டது.

40 ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சிமூலம் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணியின் வீரர்கள் நிதானமாக ஆடினர்.

இந்த அணி 40 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றது.

உமேஸ் 47 ஓட்டங்களையும் எகினேசன் 33 ஓட்டங்களையும் குகதாஸ் 24 ஓட்டங்களையும் திரன்குமார் 29 ஓட்டங்களையும் சஞ்சீவ்குமார் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

அஜித், கௌசிகன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி விரைவாக ஓட்டங்களைப் பெறமுயன்றபோது அடுத்தடுத்து விக்கெட்டுக்களைப் பறி கொடுத்தது.

இந்த அணி 27 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அரவிந் 48 ஓட்டங்களையும் சர்மிளன் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

அபினாஸ் 3 விக்கெட்டுக்களையும் கவாஸ்கர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இறுதியில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி அணி 91 ஓட்டங்களால் வெற்றிபெற்றுச் சம்பியனானது.

இந்தத் துடுப்பாட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அரவிந்தனும், சிறந்த பந்துவீச்சாளராக பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த அபினாஸும் சிறந்த களத்தடுப்பாளராகப் பம்பலப்பிட்டி இந்து மாணவன் சிந்துஜனும் ஆட்டநாயகனாக பம்பம்பலப்பிட்டி இந்து மாணவன் உமேஸும் தெரிவுசெய்யப்பட்டனர். (3-203-190)

# நெல்லியடி வித்தியாலய அணியை ஹாட்லிக் கல்லூரி அணி வென்றது

வலி.வடக்கு,ஒக்.19

அஸ்ராக் கிண்ணத்திற்காக யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கிடையே இடம்பெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் இடையேயான ஆட்டம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அனைத்து இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது.

ம.புருசோத்தமன், ரி.நிசாந்தன், எஸ்.பிரணவன் ஆகியோர் முறையே 19,19 17 ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தின் சார்பில் பந்துவீசிய ஜெ.உமைசுதன், பி.ஜீவராஜ், எஸ்.ஆரணியன் ஆகியோர் முறையே 7,2,1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத்துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 61 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

ஆகக்கூடிய ஓட்டங்களாக உமைசுதன், க.இராகவன், சி.டினாலன் ஆகியோர் முறையே 12,9,10 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் விஷ்ணுகாந், ரி.நிசாந்தன், ரி.கோகுலதாசன் ஆகியோர் முறையே 5,4,1 இலக்குகளை வீழ்த்தினர்.

இரண்டாவது இனிங்ஸில் 107 ஓட்டங்களைப் பெற்று ஹாட்லிக்கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்தது.

கபில்ராஜ், நிசாந்தன், புருசோத்தமன் ஆகியோர் முறையே 21,23,13 ஓட்டங்களை தமது பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் உமைசுதன் 4, மனோகீதன் 2 மற்றும் கரிகரன், ஜீவராஜ், ஆரணியன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் 7 இலக்குகளை இழந்து 45 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

வி.நிரோசன் 19 ஓட்டங்களை ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றார்.

பந்து வீசிய என்.விஷ்ணுகரன், ரி.நிசாந்தன் ஆகியோர் முறையே 6, 1 இலக்குகளைக் கைப்பற்றினர். (த-86)



உலக லெவன் அணியுடனான 'சுப்பர் டெஸ்ட்' கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் ஆஸ்திரேலிய அணி வீரர்கள்.

# அநுராதபுரத்தில் விளையாட்டுப்போட்டி

வலி.வடக்கு,ஒக்.19

அகில இலங்கை ரீதியில் மக்கள் வங்கியினால் ஊழியர்களுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி அநுராதபுரம் பொது விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

இப்போட்டிகளில் கலந்துகொள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கிரிக்கெட் அணியினர் கால் இறுதி ஆட்டம் வரை முன்னேறித் தோல்வி அடைந்தனர்.

இதேநேரம் இங்கு இடம்பெற்ற போட்டிகளில் கிரிக்கெட், வலைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் , பூப்பந்தாட்டம் எனப் பல போட்டிகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (3-86)



வரணி தென்னிந்தியத் திருச்சபையினரின் பகல் பராமப்பு நிலைய 23ஆவது வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. அந்த விழாவில் நிலையச் சிறார்கள் உடற்பயிற்சி நிகழ்வில் ஈடுபட்டிருப்பதைப் பட்டத்தில் காணலாம். (படங்கள்: வரணிச் செய்தியாளர்)



அச்சுவேலிப் பிரதேச பாலர் முன்பள்ளிகளுக்கிடையோன விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பாலர் முன்பள்ளிகளின் மாணவர் தலைவர்கள் ஒலிம்பிக் தீபம் ஏற்றி விளையாட்டு உறுதிப்பிரமாணம் செய்துகொள்வதைப் படத்தில் காணலாம்.

(படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)

# வடக்கு - கிழக்குப் பாடசாலைகளின் மாணவரிடையே நாடகப்போட்டி

வலி.தெற்கு,ஒக்.19

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார அலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு, தேசிய ஒருங்கிணைந்த திட்டப் பிரிவு ஆகியன இணைந்து வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளிடையே நாடகப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளன.

''நாமே நமது சொந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்போம்'' என்ற தொனிப்பொருளில் நாடகம் அமைந்திருக்கும். கடந்த காலங்களில் ஏற்பட்ட போர்ச்சூழல் குறித்தும் இன முரண்பாடுகளால் மாணவர்களிடையே ஏற்பட்ட மனோநிலை பாதிப்புகளில் இருந்து அவர்களை விடுவிக்கவும் மாணவர் மத்தியில் மறைந்து கிடக்கும் கலைசார் திறன்களை வெளிக்கொணர்வதும் தாமே தமது பிரச்சினைகளை அணுகி இலகுவாகத் தீர்த்து கொள்வதுமே இந்த நாடகப் போட்டியின் நோக்கமாக அமைந்துள்ளது.

வலய மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகிய நிலைகளில் நாடகப்போட்டி நடைபெறும். ஒரு பாடசாலையில் இருந்து ஒரு நாடகமே போட்டிக்கென மேடையேற்றப்படவேண்டும்.

மாவட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டியில் முதலிடம் பெறும் நாடகம் மாகாண மட்ட போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படும்.

மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளுக்கும் நடித்த மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

நாடகப் போட்டியில் பங்குபற்ற உள்ள பாடசாலைகள் தமது நாடகத்துக்கான எழுத்துருவை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தெரிவு செய்யப்படும் நாடகத்தை தயாரித்து நெறியாள்கை செய்வோர், ஒப்பனையாளர், ஆகியோருக்கு அடுத்த மாதம் 28 ஆம் திகதி முதல் மூன்று தினங்களுக்கு திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரியில் நாடகப்பட்டறை ஒன்றை நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.(த-152)


### கணனி இயக்குநர் தேவை

கணனி வேலையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. 20.10.2005 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் வரவும். (41658)
தொடர்பு: இல.180,பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.



### யாழ்.பல்கலைக்கழகத்தில் 06.10.2005, 07.10.2005 அன்று பட்டம் பெற்ற மாணவர்களே!

அன்றைய தினம் அரங்கில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட VEDIO, DVD மற்றும் புகைப்படப் பிரதிகளைப் பெறவிரும்புபவர்கள் விவரங்களை பதிவு செய்து பிரதிகளை உடன்பெற்றுக்கொள்ளவும். 25.10.2005 இன் பின் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
காலம் :- 19.10.2005 - 25.10.2005
நேரம் :- காலை 9.00 - 12.00, பிற்பகல் 1.00 - 5.00
தொலைபேசித் தொடர்புகளுக்கு :-
பொன்கவின் VEDIO லக்ஷிமி நாதம், புகைப்படக்கலையகம்.
S.மதன் :- 0777 288837, தர்மா 077 6544158
நேரில் :- இல.90, சட்டநாதர் சிவன்கோயில் வீதி,
(இளங்கலைஞர் மன்ற வீதி). நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். (41651)(42-11-15)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 19 - 05 - 1955 |  | 19 - 09 - 2005 |

(கடந்த 19-09-2005 அன்று சிவபதமடைந்த )

### திருமதி நவமணி சரவணமுத்து

அவர்களின் வீட்டுக்கிரியைகள் இன்று(19-10-2005) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம். (41657)(26-16-15-42)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### பூரணம் காசிப்பிள்ளை



சரவணை கிழக்கைச் சேர்ந்த திருமதி பூரணம் காசிப்பிள்ளை 17.10.2005 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - திருமேனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நொத்தாரிஸ் விநாசித்தம்பி - ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காசிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும் யோகராசா (மன்னார்), வசந்தாதேவி (ஜேர்மனி), வாகீசன் (லண்டன்), அருட்செல்வி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வராணி (ஆசிரியை, மன்/புனிதவானார் வித்தியாலயம்), சண்முகநாதன் (ஜேர்மனி), புஸ்பலதா (லண்டன்), பேரின்பதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தனஞ்ஜயன், தர்ஷிகன், அனுஜா, குணாளினி, காந்தசீலன், நிலானி, வவா, தனுசியா, தனுசங்கர், பிரவீண், நிஷாலினி, கிருஸ்ணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பூமணி, திருநீலகண்டம் இலிங்கப்பிள்ளை, இராசலிங்கம் மகேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி பராசக்தி, சோமசுந்தரம் தெய்வேந்திரம் மற்றும் மகேஸ்வரி வவா, இந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாக்கியம் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, பாலசிங்கம், மற்றும் நடராசா (கனடா), பராசக்தி, புஸ்பராணி, பரிமளா தேவி, விசாலாட்சி, மற்றும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, திருநாவுக்கரசு, இராசகோபாலபிள்ளை, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னங்கண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வி.காசிப்பிள்ளை (கணவர்),
யோகராசா (மகன் ).

சரவணை கிழக்கு,
வேலணை. (41659)(42-15-16)

# கரவெட்டி மருந்தகத்தை தரமுயர்த்த நடவடிக்கை

வடமராட்சி,ஒக்.19

கரவெட்டி அரசினர் மத்திய மருந்தகத்தை பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச வைத்தியசாலையாக தரம் உயர்த்துவதற்கு வசதியாக கரவெட்டி தச்சை ஐங்கரன் சனசமூக நிலையம், அறநெறிப் பாடசாலை ஆகியவற்றுக்கு அருகில் 12 பரப்புக் காணியை கரவெட்டி தச்சன்தோப்பு விநாயகர் ஆலய அறங்காவலர் சபை வழங்கவுள்ளது.

புதிய இடத்தில் பிரதேச வைத்தியசாலை தரத்துடன் புதிய வைத்தியசாலையைப் பகுதி பகுதியாகக் கட்டிமுடிப்பதற்கு, இவ் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சி.பொன்னம்பலம் தலைமையிலான குழுவினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரச அதிபர், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், நிக்கொட் நிறுவனம் மற்றும் பொதுமக்களின் உதவிகளை இவர்கள் நாடியுள்ளனர்.

இதற்கான நிதி சேகரிப்பின் முதலாவது நடவடிக்கையாக கொடிவாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையை பிரதேச வைத்தியசாலையாகத்தரம் உயர்த்துவதற்கு வெளிநோயாளர் பிரிவு, பிரசவ விடுதி, ஆண்கள் பெண்களுக்கான தனித்தனி பொது வைத்தியத்துக்கான விடுதிகள், வைத்திய அதிகாரி விடுதி, மருத்துவமாது விடுதி என்பன அமைக்கப்படவேண்டும் என்று பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (த-173)

# குடாநாட்டில் தபால் மூலம் வாக்களிக்க 4 ஆயிரத்து 568 வாக்காளர்கள் தகுதி

யாழ்ப்பாணம்,ஒக்.19

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியில் 4 ஆயிரத்து 568 வாக்காளர்கள் தபால்மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்

யாழ்.மாவட்டத் தேர்தல் தொகுதியில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 4 ஆயிரத்து 968 வாக்காளர்கள் விண்ணப்பித்திருந்தனர். இவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றுள் 4 ஆயிரத்து 568 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஏனைய 400 விண்ணப்பங்களும் பல் வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (-202-204)


### ஒத்துமாறல்

யாழ்.மாவட்டத்தில் திட்டமிடல் நிதி உதவியாளராக நியமனம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவர் ஆசிரியர் சேவையில் உள்ள ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்புகளுக்கு: T.P.: 0777 251292.
(C/45805)(42.11.15)


## கண்டாவளையில் நாளை நடமாடும் சேவை

கிளிநொச்சி,ஒக்.19

காலம் கடந்த பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர் தலைமையில் நடைபெறவுள்ள இச்சேவையில் இதுவரை பிறப்பு, இறப்புப் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியோர் உரிய ஆவணங்களுடன் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார். (த-202)

## தேர்தல் விளம்பரங்களை அகற்ற நிதி ஒதுக்கீடு

கொழும்பு,ஒக்.19

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாட்டில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள், அமைக்கப்பட்டுள்ள பதாகைகள் மற்றும் 'கட் அவுட்'டுகளை அகற்றுவதற்கான உதவித் தொகையாக ஒருகோடியே 39 லட்சம் ரூபா பொலீஸ் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் செயலகத்தின் தலைமைக் கணக்காளரான ஏ.ஹப்புஆராய்ச்சி இத்தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள வேட்பாளர்களால் நாடு பூராகவும் காட்சிப் படுத்தப்பட்டுள்ள இவற்றை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் களுக்கு வழங்க இத்தொகை தேவைப்படுவதாக பொலீஸ் திணைக்களம் கோரியதாகவும் -

இதனையடுத்து, தேர்தலுக்கென ஒதுக்கப் பட்டுள்ள நிதியிலிருந்து இத்தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-206)

## காசநோய் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.19

இலங்கை காசநோய் தடுப்புச் சங்க யாழ்.கிளையின் ஏற்பாட்டில் காசநோய் தடுப்புமுறை குறித்த கலந்துரையாடல் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பண்ணை மார்புச் சிகிச்சை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் சி.யமுனானந்தன் தலை மையில் நடைபெறவுள்ள இக்கலந்து ரையாடலில் புதிய அங்கத்துவர் தெரிவும் இடம்பெற உள்ளதால் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-204)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2005ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி எய்தியமையை யிட்டு மனமாரப் பாராட்டி, மேலும் இவர் கல்வியில் சிறந்து விளங்கவேண்டுமென அனலை ஐயனாரை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்.
அம்மம்மா, மாமாமார்,
மாமிமார்,
பெரியம்மா குடும்பம்,
அன்ரி குடும்பம்.

**சிவராசா அர்ச்சனா**
(அபி)
[யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை]

6ஆம் வட்டாரம்,
அனலைதீவு. (41647)(42-11-15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/நெல்லியடி மெ.மி.த.பாடசாலை மாணவி
திரு.திருமதி கிருஸ்ணராஜா தம்பதிகளின்
புதல்வி

**செல்வி சி.மாதுளா**

அவர்கள் 2005 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 144 புள்ளிகளைப் பெற்று சிறப்புறச் சித்தி எய்தியமையையிட்டு அவரையும் அவருக்கு கல்வியூட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**மாமன்மார்.**

மகாத்மா வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (41650)(32-11-15-42)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 11 - 04 - 1916 |  | 19 - 09 - 2005 |

வேலணை கிழக்கு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மாவடி அம்மன் கோயிலடி, இராமநாதபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

### திருமதி சின்னம்மா இராசதுரை

வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இவ்வுலகில் எமக்கு வாழ வழிகாட்டி
விண்ணுலகு சென்ற உங்களின்...
ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

- குடும்பத்தினர்.

இல.331, 5ஆம் யுனிற்.
இராமநாதபுரம், கிளிநொச்சி. (சி/45806)(54.15.16.42)
தகவல்: ம.லோகநாதன் (இலட்சுமணன் - போன்). வவுனியா

# பெரும்பான்மை...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஊழியரையும் நிரந்தரமாக்குதல். தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம்.

### அரச துறை

இவ்வருட வரவு - செலவுத்திட்டத்தில் குறிப்பிட்ட சம்பள அதிகரிப்பின் எஞ்சிய பகுதியை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் வழங்குதல். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு மாதந்தோறும் ஆயிரம் ரூபாவை கொடுப்பனவாக வழங்குதல். விடுமுறை எடுக்காமல் சேவையாற்றியதற்கான கொடுப்பனவுகள். அரச ஊழியர்களுக்கு சுகாதார மற்றும் காப்புறுதி திட்டங்கள். அரச, அரச சார்புடைய மற்றும் கூட்டுத்தாபனம், சபைகளின் உத்தியோகத்தர்களுக்காக முன்னரைப் போன்று சுங்கவரி யற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல். விசேட வீடமைப்புக் கடன். வெளிநாட்டில் தொழில் புரிவோருக்கான மருத்துவ, வீடமைப்பு மற்றும் இதர நலன்புரிச் செயற்பாடுகள்.

### வறுமை நிவாரணம்

சமுர்த்தியாளர்களின் மாதாந்த வருமானத்தை ஐயாயிரம் ரூபாவரை அதி கரிக்கத் திட்டம். சமுர்த்திக் கொடுப் பனவை 50 வீதமாக உயர்த்துதல். சமுர்த்தி நன்மை பெறும் குடும்பங்களுக்கு மரணமொன்றின் போது வழங்கப்படும் ஐயாயிரம் ரூபாவை 10 ஆயிரமாக அதிகரித்தல். பிரசவத்திற்காக வழங்கப்படும் 2,500 ரூபாவை ஐயாயிரம் ரூபாவாக அதிகரித்தல். சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களைக் கட்டியெழுப்ப ஒரு லட்சம் ரூபா வரையான கடன். சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பத்தின் பொறுப்பானவொருவர் உயிரிழந்தால் அல்லது ஊனமுற்றால் குடும்ப வருமானத்தை திடப்படுத்திக்கொள்ள இரண்டரை லட்சம் ரூபா கொடுப்பனவு.

### வீடமைப்புக்கான வசதி

வீடமைப்புக்கான ஒரு லட்சம் காணிகள், அரச ஊழியர்களுக்கான நான்கு மாடிவீட்டுத் திட்டங்கள். கொழும்பு சேரிகளில் வசிக்கும் மக்களுக்கு 65 ஆயிரம் வீடுகள். சிறந்த வீடமைப்புக் கடன் வசதிகள். கிராமமொன்றிற்கு வருடாந்தம் புதிதாக 25 வீடுகள்.

### பாதுகாப்புத்துறை

நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாட்டைக் காக்கும் வகையிலான தேசிய பாதுகாப்புக் கொள்கை. தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம். இராணுவ வீரர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் வீடுகள். முப்படைகளின் வீரர்களுக்காக வாகனம் அல்லது மோட்டார் சைக்கிள் கொள்வனவிற்கு நீண்டகாலக்கடன். தீவிரவாதத்திற்கெதிரான செயற்பாட்டின்போது தகவல்கள் பயிற்சி மற்றும் அறிவைப் பரிமாறிக் கொள்வதற்காக இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுடன் ஒன்றுபடுதல்.

பொலீஸ் சேவையிலுள்ள குறைபாடு களை சீர்செய்து ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு, இடமாற்றம் ஆகியன நீதியாகவும், நேர்மை யாக வும் நடைபெற திட்டங்களை வகுத்தல். வாகனம் மற்றும் மோட்டார் சைக்கிள் இறக்குமதி செய்ய பொலீஸாருக்கு நீண்ட கால கடன், உப பொலீஸ் பரிசோதகர்களை நிரந்தர பொலீஸ் சேவைக்குச் சேர்த்தல்.

50 கிலோ எடையுடைய அனைத்து இரசாயன உரவகைகளையும் 350 ரூபாவிற்கு வழங்குதல். குறைந்த விலைக்கு கிருமி மற்றும் களை நாசினிகள். விவசாய உபகரணங்கள் அனைத்திற்குமான வரி நீக்கம். அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மண்வெட்டி. விவசாயக் கடன்கள் அனைத்தும் ரத்து. விவசாயத்துறைக்கு புதிய தொழிநுட் பங்கள். நெற் சந்தைப்படுத்தும் சபையை மீண்டும் நிறுவுதல். நெல்லுக்கான நிர்ணய விலை. ஈரவலயங்களில் விவசாய மேம் பாட்டிற்கு புதிய திட்டங்கள். நெல் ஆலை உரிமையாளர்களுக்காக பத்து கோடி ரூபா வரையான கடன்வசதிகள். பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு புதிய திட்டங்கள்.

### மீன்பிடித்துறை

நிவாரண அடிப்படையில் மூன்று வருட காலத்தில் 500 இயந்திரப் படகுகளை மீனவர்களுக்கு வழங்குதல். வலை உட்பட இதர மீன்பிடி உபகரணங்களை மானிய அடிப்படையில் வழங்குதல். கரையோரப்பகுதிகளி லுள்ள மீன்பிடித் துறைமுகங்களை மேம் படுத்தல். மீனவர்களுக்கான எரிபொருள் நிவாரணம்.

### போக்குவரத்து

போக்குவரத்துத் தொடர்பில் நிரந் தரமான தேசியக் கொள்கை. பொதுப் போக்குவரத்திற்கு முன்னுரிமை. ரயில் கட்ட ணங்களை 15வீதமாக குறைத்தல். ரயில்வே அபிவிருத்திக்கான தசாப்தகால திட்டம். வடக்கு மற்றும் மன்னார் ரயில் பாதையை மீளநிர்மாணித்தல். மூன்று வருட காலத்தில் ஐயாயிரம் பஸ்களை இலங்கைப் போக்குவரத்து சபைக்கு பெற்றுக் கொடுத்தல். தனியார் பஸ் துறையை மேம் படுத்தல். மூன்று வருட காலத்தில் 20 மேம் பாலங்கள். பொது போக்குவரத்து சேவைகளுக்கு எரிபொருள் நிவாரணம்.

### பெருந்தோட்டத்துறை

தோட்டப்புற மக்களுக்கு சொந்தமாக காணிகளை வழங்குதல். பெருந்தோட்ட, உட்கட்டமைப்பு மற்றும் மனிதவள மேம்பாட்டிற்கு அதிகாரசபை. பெருந்தோட்டப் பகுதிகளில் வீதிகளை அபிவிருத்தி செய்தல். மக்களுக்கான கோதுமை மா மானியம். பெருந் தோட்டப் பகுதிகளின் 400 பாடசாலைகளை தரமுயர்த்தல். தோட்டப் பகுதியிலுள்ள இளைஞர்,யுவதிகளுக்காக 3000 ஆசிரிய நியமனங்கள். சுகாதார வசதிகள். -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர சிவில் விமான சேவைகள் விஞ்ஞான தொழில்நுட்பம்,சுகாதாரத் துறை, கல்வி, கலை, தகவல், விளையாட்டு போன்ற துறைகளைக் கட்டி யெழுப் பவும் பல திட்டங்கள் இந்த விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளன. (க-3)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது அன்பர்

**திருமதி தனலட்சுமி நாகரத்தினம்**

தீவக கல்வி வலயத்திலிருந்து 'சிறந்த அதிபராக' தெரிவு செய்யப்பட்டு 06.10.2005 இல் திருகோணமலையில் கல்வி அமைச்சும் வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்திய உலக ஆசிரியர் தினத்தன்று கௌரவிக்கப்பட்டுள்ளமையையிட்டு பெருமகிழ்வோடு பாராட்டுவதுடன் அவர் மேலும் பல உயர்வுகளைப் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

யா/வலந்தலை
வடக்கு அ.மி.த.க.வி.,
காரைநகர்.

- ஆசிரியர்கள்.

## இன்று மங்களகரமான திறப்பு விழா

## நல்லூர் மல்ரி கொம்ளெக்ஸ்

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத்தொடர்பு சேவைகள், வான் சேவை, வீடியோ கசட், CDகள் வாடகை சேவை, கலர் மீன்கள், மீன்தொட்டிகள், மீன்தொட்டிக்குரிய அழகுப் பொருள்கள், லவ்பேட்ஸ் வகைகள், ஆடம்பரப் பரிசுப் பொருள்கள் போன்றன எம்மிடம்பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் மல்ரி கொம்ளெக்ஸ்**
631, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

கிளை: இரகுராமன் பல்பொருள் வாணிபம்
கரணவாய்த் தெற்கு, கரவெட்டி.
(C-45810)(18.12.45)


# 'ஹலோ ட்ரஸ்ட்' வாகனத்துக்கு ஆபத்து விளைவிக்க முயற்சி

## கண்ணிகள் வைக்கப்பட்டன என அந்த நிறுவனம் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.19

குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் 'ஹலோ ட்ரஸ்ட்' நிறு வனத்தின் வாகனம் ஒன்றின் சக்கரங்களுக்கு முன்பாக ஆபத்தை விளைவிக்கக் கூடிய கண்ணி வெடிகள் வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை 6.30 மணிக்கு இந்தச் சம்பவம் நடைபெற்றது என அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் வெடிகள் வைக்கப்பட்டிருந்த முறையானது எவரும் காயமுறக்கூடிய விதத்தில் இருக்கவில்லை என்றாலும் வாகனத்தின் ரயர்கள் மட்டுமே மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்றும் அந்தக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துக்கு எவரும் உரிமை கோரவில்லை. முழுவதும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களைக் கொண்ட கண்ணி வெடி அகற்றும் ஆட்களைக் கொண்டு செல்லும் வாகனத்தின் முன்கண்ணி வெடிகளைப் போட்டமைக்கான வெளிபடைக்காரணம் எதுவும் தெரியவில்லை.

யாழ்ப்பாண மக்கள் அனைவருக்குமே பயன்தரும் மனிதநேய உயிர் காக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் செயற்பாட்டில் இவ்வாறு தலையிடும் நபர்கள் இதற்குப் பொறுப்பாளிகளாக்கப்படவேண்டும் - என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது. பொலீஸ் விசாரணை தொடர்கிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

### குப்பை வாளி மூலம் சுகாதாரம் பேணுகை

நவாலி,ஒக்.19

மானிப்பாய் வர்த்தக சங்கத்தினர் அப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு குப்பைகளை போடு வதற்கென தகரப் பீப்பாக்களை வழங்கியுள்ளனர்.

இதனால் வர்த்தக நிலையங்களின் முன் குப்பைகள் இல்லாமல் சுத்தமாக இருப்பதாக கூறப்பட்டது. (9-100)


## தேவை

தொலைபேசி, போட்டோப்பிரதி இயந்திரம் இயக்கத் தெரிந்தவர்கள் பகல், இரவு நேரங்களில் வேலை செய்யக் கூடியவர்கள்.

சம்பளம் 5000 ரூபா வரை வழங்கப்படும்.

விரும்புவோர் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிக்கு நேரில் சமுகம் தரவும்.

**சிற்றி தொலைத்தொடர்பகம்**
இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி.

(41665) (18-12-45)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### கலைப்பீடம்

ஈராண்டு பகுதிநேரப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா
கற்கைநெறி 2005/2007
புதிய அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் அரசாங்க பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும் கோரப்படுகின்றன.விண்ணப்பதாரிகள் 07.11.2005 அன்று 50 வயதுக்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறையில் ரூபா 100.00 இற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 100.00 இற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் ரூபா 5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரியிடப்பட்ட தபால் உறையினையும் கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புதல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

இக்கற்கை நெறிக்கான கட்டண விவரங்கள்

| | |
|---|---|
| பதிவுக் கட்ணம் | :750.00 |
| கற்கைநெறிக்கட்டணம் | :10,000.00 |
| நூலக வைப்புக் கட்டணம்: | 500.00(மீளப்பெறத்தக்கது) |
| நூலக கட்டணம் | :750.00 |
| மொத்தம் | :12,000.00 |

எழுத்து தேர்வு (பொது விவேகம், கல்வியியல் பொதுத் தகைமை என்னும் பாடங்கள்) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து 25 மைல் சுற்றாடலுக்குள் அமைந்துள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெறுவதோடு, இக்கற்கை நெறிக்குப் பதிவு செய்யும்போது மேற்குறிப்பிட்ட இடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் யாவும் 07.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் கல்வியியற்றுறை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்,
18.10.2005 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(C-45808)(18-45-12)

## யா/யூனியன் கல்லூரி
### தெல்லிப்பழை
### தரம் 6 அனுமதி - 2006

விண். ணப்பங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 11.11.2005

குறிப்பு: தரம் 7,8,9 வகுப்புகளுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(41667)(18-12-45) - அதிபர்.

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜனத்திரள் வாரம்
ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த
**மழை** (சிங்கம்)
காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30,

**ராஜா** யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, அசின், நயன்தாரா நடித்த
3 ஆவது ஜனத்திரள் வாரம்
**கஜினி**
காட்சிநேரம்:- பு.நே.
10.30, 2.30 6.30 மட்டும்

**மனோகரா** யாழ்ப்பாணம்
பார்த்தீபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த
**குண்டக்க மண்டக்க**
காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)
(க-45593)


## மரண அறிவித்தல்

### திருமதி நாகேந்திரம் விமலாதேவி (விமலா)

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேந்திரம் விமலாதேவி அவர்கள் 17.10.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் இளையதம்பி - மங்கையற்கரசி தம்பதியரின் இளையமகளும் நாகேந்திரனின் அன்பு மனைவியும் நீலாதாட்சி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் அம்பிகைபாலன் (U.K.), கௌரிசங்கர், சிறிஸ்கந்தா(கொழும்பு), முருகன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவஜனனி, கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமியும் ஆதிகஜன், ஜெனிஷா, அஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.10.2005) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

52/6, உடையார் லேன்,
பழம் றோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
வ.நாகேந்திரம் (கணவன்).
(41629)(18-45-12)

# அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பு !

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவுடன் அவசர காலச்சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி, எதிர் வரும் நவம்பர் 13ஆம் திகதிவரை அவசரகாலச்சட்டம் நடைமுறையில் இருக்கும்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்திற்கு நீடிப்பதற்கான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

விவாதத்தின் இறுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான சுரேஷ் பிரேமச்சந்திரன் வாக்கெடுப்பு நடத்தப் படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இதைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆதரவாக 80 வாக்குகளும், எதிராக 19 வாக்குகளும் கிடைத்தன 61 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஆளும் தரப்புக்கு ஆதரவாக ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய, ஐக்கிய தேசியக்கட்சி என்பன வாக்களித்தன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, மலையக மக்கள் முன்னணி, மேல்மாகாண மக்கள் முன்னணி என்பவற்றின் உறுப்பினர்க ளுடன் ஐ.தே.க. கொழும்பு மாவட்ட எம்.பி. மகேஸ்வரனும் எதிர்த்து வாக்களித்தார், வாக்கெடுப்பு நடந்த நேரம் இ.தொ.கா. உறுப்பினர் எவரும் சபையில் இருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் நடுநிலை வகித்தது.முன்னால் அமைச்சர் கதிர்காமர் கொலைக்குப் பின்னர் கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்டம் மூன்றாவது முறையாக நீடிக்கப்பட்டுள்ளது. (க - 3)

# சினைப்பர் இரசாயனப் பகுப்பாய்வுக்கு

புத்தளம், மாரவிலவில் அண்மையில் பொலிஸாரால் மீட்கப்பட்ட ஆயுதத் தொகுதியில் இருந்த சினைப்பர் துப்பாக்கி கதிர்காமர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதா என்பதை அந்த ஆயுதத்தை இராசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி உறுதிப் படுத்துமாறு கொழும்பு பிரதம நீதிவான் குசல சரோஜினி விரவர்த்தன உத்தரவிட்டார்.

மாரவிலவில் கடந்த 9ஆம் திகதி கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் நேற்று பொலிஸாரால் கொழும்பு பிரதம நீதிவான் மன்றில் ஒப்படைக்கப்பட்டன. அப்போதே நீதிவான் மேற்படி உத்தரவை விடுத்தார். (க)

# புலிகளோடு இணக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாகப் பிரதமர் தெரிவித் துள்ள கருத்துக்களின் சுருக்கமான தொகுப்பு வருமாறு:-

* ஐ.தே.க. அரசினால் உருவாக்கப்பட்ட போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் பலபிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. வடக்கில் ஜனநாயகம் அழிந்துவிட்டது. கிழக்கில் மூவின மக்களும் அநீதிக்கும் அவமானத்துக்கும் உள்ளாகியுள்ளனர். அரச படைகள் பலவீனமாகியுள்ளன. ஜனநாயக வழியில் இருப்போரும் ஆயுதம் தூக்கும் நிலைமை வந்துள்ளது.

* நான் ஜனாதிபதியானதும் ஜனநாயகக் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள், மதத் தலைவர்கள் வடக்கு-கிழக்கில் உள்ள மூவின மக்களின் அமைப்புகள் ஆகிய தரப்புகளுடன் கலந்துரையாடுவேன்.

இந்தப் பேச்சுக்கள் மூன்று மாதத்தில் முடிக்கப்படும். அதன் அடிப்படையில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள்,இணக்கம் காணப் படாத விடயங்கள் என முடிவுகள் இரண்டு வகைப்படுத்தப்படும்.

இவற்றில் இணக்கம் காணப்படாத விடயத்துக்குத் தேசிய கொள்கை ஒன்று வகுக்கப்படும். அதற்கு மக்கள் அனுமதி பெறுவதற்காகச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அந்தத் தேசியக் கொள்கையில் நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி அமைப்பு, மக்களின் தேசிய அடையாளம், அமைதியான சகவாழ்வு என்பன பாதுகாக்கப்படும். பாரம்பரிய தாயகம், சுயநிர்ணய உரிமை போன்ற அடிப்படை வாதங்களில் சிக்கிக் கொள்ளப்படமாட்டாது.

மக்கள் ஆணையின் அடிப்படையே பெரும்பான்மையின் முடிவுதான். அந்த ரீதியில் எனது கருத்தை விடுத்து பெரும்பான்மையினரின் கருத்தை ஏற்பேன்.

தேசிய கொள்கையைத் தீர்மானிக்கும் முயற்சி ஒரு புறம் நடக்க, மறுபுறம் புலிகளுடன் நேரடியாகப் பேசுவேன். இதற்காக அதன் தலைவரையும் சந்திக்க எண்ணம் கொண்டுள்ளேன்.

* சர்வஜன வாக்கெடுப்பு அங்கீகாரத்துடன் தயாரிக்கப்பட்ட தேசிய கொள்கையை புலிகள் முன் வைப்பேன். அப்போது முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாத்து அவர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவேன்.

* திட்டமின்றி, எதிர்காலமின்றி, காலவரையறையின்றி, ஐ.தே.மு. அரசு நடத்திய பேச்சுகள் கௌரவமான சமாதானத்தைத் தரவில்லை. அதனால் நான் மாற்று வழி ஒன்றைக் கடைப்பிடிக்கப்போகிறேன்.

புலிகளுக்குக் குறிப்பிட்ட காலவரையறை, கால அட்டவணை ஒன்றை வழங்குவேன்.

பிரிவினைவாதத்தைக் கைவிடுதல், ஆயுதக் களைவு, ஜனநாயகத்திற்குப் பிரவேசித்தல், இறுதித்தீர்வு, அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகியவை தொடர்பில் திட்டவட்டமான வரையறை செய்யப்படும்.

* இந்தியாவுடனும் பேசப்படும். எமது நாட்டிற்குப் பெரிதும் உதவியுள்ள சீனா,ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனும் ஆசிய நாடுகளுடனும் ஒத்துழைப்புக் கட்டியெழுப் பப்படும்.

அமைதி முயற்சிகளுக்கு இணைத் தலைமை வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், நோர்வே, அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் இந்த - மற்றைய- நாடுகளின் பிரவேசம் குறித்தும் பேசப்படும்.

* இந்த அனைத்துப் பேச்சுகளும் வெற்றியளித்தால், காணப்படும் தீர்வை நடைமுறைப் படுத்துவதற்குப் புதிய அரசமைப்பு ஒன்று தயாரிக்கப்படும். அதற்காக அரசமைப்பு நிர்ணய சபை ஒன்றை நியமிப்பேன். அதற்கு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதித்துவமும் பெறப் படும்.

அப்படித் தயாரிக்கப்படும் அமைப்பு நகல் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள்முன் சமர்ப்பிக்கப்படும். பெரும்பான்மையானவர்களின் விருப்புடன் அது அங்கீகரிக்கப்பட்டால் உடனடியாக அதை நடைமுறைப்படுத்துவேன்.

* இதேசமயம், போர் நிறுத்த ஒப்பந்தம் உரிய முறையில் மீளாய்வு செய்யப்பட்டு சீர மைக்கப்படும். கண்காணிப்பு முறையும் மீள ஒழுங்கு படுத்தப்படும்.

* மோதல்களால் இடம் பெயர்ந்தோர் மீள்குடியேறுவதை உறுதிப்படுத்த அதிகாரசபை ஒன்று அமைக்கப்படும்.

- இவ்வாறு பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (க-3)


## ரயர் ஏல விற்பனை - UNHCR

*பாவித்த ரயர்கள் 22.10.2005 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்படும். 19, 20, 21 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணி வரை UNHCR அலுவலகத்தில் (இல.223, கோயில் வீதி, யாழ்ப்பாணம்) ரயர்களைப் பார்வையிடலாம்.*

*ஏலம் எடுப்பவர்கள் உடனடியாகப் பணம் செலுத்த வேண்டும்.*

Head office,
UNHCR,
Jaffna.

*(சி-45801)(18-12)*


# தீவகத்துக்கான பஸ் சேவையை முடக்க விஷமிகள் சதிமுயற்சி

உரும்பிராய்,ஒக்.19

பண்ணைப் பாலத்துக்கு அப்பால் தீவுப் பகுதிகளுக்குப் பயணிகளை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபட்டுள்ள போக்குவரத்துச் சபை பஸ்களின் சக்கர ரயர்களில் விஷமிகள் சிலர் ஆணிகளை செலுத்தி வருகின்றனர் எனக் கூறப் பட்டது.

கடந்த இரண்டு நாள்களாக இந்த விஷமச்செயல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நாசகாரச் செயலில் ஈடுபடுவோரை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்துச் சபையின் வடபகுதி உயர் அதிகாரிகள் ஊர்காவற்றுறைப் பொலீஸாரிடம் கேட்டுள்ளனர்.

யாழ். - பண்ணைப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த 15ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து வீதிப் போக்கு வரத்துக்கு மாற்றீடாக சிறிய தூரத்துக்குக் கடல் வழிப் போக்குவரத்து நடத்தப்பட்டு வருகிறது.

பண்ணைப் பாலத்திற்கு இரு பக்கங்களிலும் தற்காலிக இறங்குதுறைகள் அமைக்கப்பட்டுப் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இரண்டு முனைகளிலும் தயார் நிலையில் தரித்து நிற்கும் பஸ்கள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (3-9-15)

# நேற்று மாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமானம் மூலம் நாடு திரும்பினார். கட்டுநாயக்க விமான நிலையத் தில் இருந்து ஹெலி மூலம் ஜனாதிபதி மாளி கைக்கு விரைந்த அவர், உடனடியாக மந்திரா லோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

தற்போதைய அமைச்சரவையில் உள்ள மூத்த அமைச்சர்களும் சுதந்திரக் கட்சியின் மூத்த பிரமுகர்களும் இந்த மந்திராலோசனைக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேற்றுக் காலையில் வெளியிடப்பட்ட நிலையில் ஜனாதிபதி நாடு திரும்பியுள்ளார். வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு ஜனாதிபதி அனுமதி வழங்கவில்லை என்று கூறப்படுகின்றது. அவரது கொள்கைகளுக்கு முரணான பல விடயங்கள் மஹிந்தவின் விஞ்ஞாபனத்தில் அடங்கியுள்ளன என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (க-3)

# மஹிந்தவின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கிடைக்கவேயில்லை.
தமிழ் பிரதிகளை வெளியிடும் பொறுப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப் பட்டது.

ஆனால், தமிழ்ப் பிரதியில் சில திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பதால் அது வெளிவர இன்னும் ஓரிரு தினங்கள் செல்லும் என்றார் அமைச்சர் டக்ளஸ்.

எதிரணி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் நேரகாலத்துடன் வெளியிடப்பட்ட அதே சமயம், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஒரே சமயத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க-3)

# பொலீ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த கான்ஸ்டபிள்களில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றவர் உடனடியாக மட்டக் களப்பு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் அவர்மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டார்.

இந்தத் தாக்குதல் குறித்து களுவாஞ்சிக்குடிப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (க-3-8)

# பொலீஸ் சார்ஜன்ட் கைது!

கசிப்புக் காய்ச்சி விற்பவர் என்று கூறப்படும் நபர் ஒருவரிடம் இருந்து லஞ்சம் பெ... றார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மாரவில பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்... ஒருவர் லஞ்ச, ஊழல் தடுப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ள...

அவரை எதிர்வரும் 25ஆம் திகதி வ... விளக்கமறியலில் வைக்குமாறு கொழு... பிரதம நீதிவான் மன்ற நீதிவான் கு... சரோஜினி வீரவர்த்தன உத்தரவிட்டார்.

இது தொடர்பாக மாரவில பொலி... நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவை... சேர்ந்தவரான எம்.எஸ்.பீரிஸ் என்பவ... கைது செய்யப்பட்டுள்ளவராவார். (க...

# வடக்கையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாதக்கருத்தியலில் புதைந்துள்ள பேரி... வாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து 'தமிழர் தா... கம்' என்ற கோட்பாட்டைத் தமது தேர்தல் வி... ஞாபனத்தில் ஒரேயடியாக நிராகரித்திருக்... பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழர் தா... கத்தைத் துண்டாக்கும் உள்நோக்கம் காரண... கவே அதனை வடக்கு மாகாணம், கிழக்கு மா... ணம் எனப் பிரித்துக் குறிப்பிடும் வாசக... களைத் தமது விஞ்ஞாபனத்தில் வலி... புகுத்திக் கொண்டாரோ என்ற சந்தேகம் த... ழர்கள் தரப்பில் எழுப்பப்பட்டுள்ளது.

இதை ஊர்ஜிதப்படுத்துமாற் போல் ே... றைய தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டுக்கு... பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாந... டில் கருத்து வெளியிட்ட - பிரதமர் மஹி... தவுடன் அணி சேர்ந்துள்ள - அமைச்சர் அ... வுல்லா, வடக்கையும்-கிழக்கையும்பிரிப்ப... மூலமே சாத்தியமான தீர்வு ஒன்றைக் கா... முடியும் என வலியுறுத்தியிருந்தார் என்ப... குறிப்பிடத்தக்கது. (க-...

# துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு தபால் நிலைய சிற்றுண்டி... சாலையில் தொழில்புரியும் இவர், தன... வீட்டில் இருந்து தொழிலுக்குச் செல்லு... வழியில் வைத்து இனந்தெரியாத நபர்க... னால் வழிமறிக்கப்பட்டு பிஸ்ரலினால் சுட... பட்டுள்ளார் எனப் பொலீஸார் கூறுகின்றன...

இவரது உடலில் நான்கு துப்பாக்... சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என வைத்... சாலை அதிகாரியொருவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதி... விசாரணைகளை மட்டக்களப்பு தலைமை... கப் பொலீஸார் மேற் கொண்டு வருகின்றன... (க-...





## வெளிவந்து விட்டது

க.பொ.த (உ/த)

பௌதீகவியல்

பௌதிகவியல்-1

(வினாக்கள் விடைகளுடன்)

புதிய வினாக்கள். London AL வினாக்கள் அடங்கியது

ஆசிரியர் மா. கருணாநிதி (B.Sc)

கிடைக்கும் இடங்கள்

NEW SCIENCE HALL, JAFFNA
NIRU TUITION CENTRE, KONDAVIL
பிரபல புத்தகசாலைகள்



EXPOAIR எக்ஸ்போ ஏயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...



தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுக்ளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.